Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
THURSDAY, OCTOBER 03, 2024
வியாழக்கிழமை ஒக்டோபர் 03, 2024 | ஒளி: 10 கதிர்: 064 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



## நவராத்திரி விரதம் இன்று ஆரம்பம்

முழுச் செய்தி P7



# ‘மத்திய கிழக்கு வெடிக்கிறது’

இஸ்ரேல் மீதான ஏவுகணை தாக்குதலை ஈரான். செவ்வாய்க்கிழமை (01) நள்ளிரவில் தொடங்கியது. இதனால் மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட சர்வதேசத்தில் பதற்றமான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது.

பாலஸ்தீனத்தின் காசா, லெபனான் மீதான தாக்குதல்கள், ஹிஸ்புல்லா தலைவர்கள் படுகொலை உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலின் டெல் அவிவ் உள்ளிட்ட முக்கிய நகரங்களை நோக்கி ஈரான் நூற்றுக்கணக்கான ஏவுகணைகளை ஏவியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

தொடர்ச்சி P2





# திலித்துடன் இணைந்தார் ரொஷான் ரணசிங்க

தொழிலதிபரான சட்டத்தரணி திலித் ஜயவீரவின் தலைமையிலான மௌபிம ஜனதா கட்சியில், 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க இணைந்துகொண்டார். அவர், பொரளையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் மௌபிம ஜனதா கட்சியின் உயர் பதவிகளுக்கான நியமனக் கடிதத்தை, புதன்கிழமை (02) ஏற்றுக்கொண்டார்.

அவருடன், முன்னாள் அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண, மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் மிலன் ஜயதிலக்க, இராஜித ஹப்புஆராச்சி ஆகியோரும் மௌபிம ஜனதா கட்சியில் இணைந்துகொண்டனர்.

## “முன்னாள் எம்.பிக்கு விருப்பமே இல்லை”



க.அகரன்

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடாதிருக்கத் தீர்மானித்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தெற்கிலே மக்கள் மத்தியில் குறிப்பாக சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியிலே அரசியல் மாற்றம் ஒன்றின் தேவை உணரப்பட்டது. அதன் விளைவுதான் அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகியுள்ளார்.

அதைப்போலவே வடக்கு கிழக்கில் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் தமிழ் மக்களும் மாற்றம் ஒன்றினை எதிர்பார்த்து நிற்கின்றனர். அது புதியவர்களையும், இளையோரையும் பாராளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும் என்பதாகும்.

தொடர்ச்சி P2







## கொழும்பில் காந்தி ஜெயந்தி

155ஆவது காந்தி ஜெயந்தியினை நினைவுகூரும் முகமாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, கொழும்பில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தி சிலைக்கு புதன்கிழமை (02) மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து உயர்ஸ்தானிகர், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய சந்திப்பொன்றினையும் மேற்கொண்டிருந்தார்.

## “உறவினர்கள் அஞ்ச வேண்டாம்”



இஸ்ரேலிலுள்ள இலங்கையர்கள் தொடர்பில் அவர்களின் உறவினர்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை எனவும் இலங்கை தூதரகம் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் தீவிரமாகக் கண்காணித்து வருவதாகவும் இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜில்மாட் காதலி சிக்கினார்

கனகராசா சரவணன்

காதலனான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை ஒட்டிசுட்டானில் இருந்து தேடிவந்த காதலிக்குத் தங்குவதற்கு அடைக்கலம் கொடுத்த பெண் பொலிஸ் உத்தியோத்தரின் வீட்டிலிருந்த 9 பவுண் தங்க ஆபரணங்கள் களவாடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில், ஒட்டிசுட்டானில் வைத்து கைது செய்யப்பட்ட 33 வயதுடைய பெண்ணொருவரை எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் செவ்வாய்க்கிழமை(01) உத்தரவிட்டார்.


சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, ஆரையம்பதியைச் சேர்ந்த திருமணமாகி குழந்தையுள்ள பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்துள்ளார். தான் திருமணமாகாதவர் எனக்கூறி, 33 வயதுடைய பெண்ணொருவரை காதலித்து வந்துள்ளார்.

எனினும், அந்த பெண்ணை, பொலிஸ் உத்தியோகத்தர் ஏமாற்றிவிட்டு அங்கிருந்து களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ளார். எனினும், அந்த பெண், தன் காதலனை களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்துக்கு ஜூன் மாதம் சென்று சந்தித்தித்துள்ளார்.

அப்போதுதான், தன்னுடைய காதலன் திருமணம் முடித்தவர் என்றும் அவருக்கு குழந்தைகள் இருப்பதையும் கண்டறிந்துகொண்டார். எனினும்,

தொடர்ச்சி P2

## சிலிண்டரா? யானையா? ஆராய்கிறது ஐ.தே.க.



எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் எந்த சின்னத்தில் போட்டியிடுவது என்பது தொடர்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கூட்டத்தில் ஆராயப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## “காலணிகளின் விலையில் மாற்றம்”

பாடசாலை காலணிகள் மற்றும் அவை சார்ந்தவற்றின் விலைகளை விரைவில் குறைக்கத் தீர்மானித்துள்ளதாக பாதணிகள் மற்றும் தோல் பொருட்கள் தொழில்துறையினர் சங்கம் (FLGIG) தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அந்த சங்கத்தின் தலைவர் புத்திக விமலசிறி, அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது கோரிக்கைகளை எதிர்பார்க்கும் சமூகத்தில், அரசாங்கத்திற்கு ஆதரவாக நாட்டின் தொழில்துறையினர் மற்றும் அபிவிருத்தியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று கூறினார்.

இலங்கையில் தயாரிக்கப்படும் பொருட்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் நுகர்வோர் தமது பங்களிப்பை வழங்குமாறும் தலைவர் வேண்டுகோள் விடுத்தார்.



## அனுரவுக்கு நாமல் சவால்



ராஜபக்ஷ ஆட்சியின் போது, உகண்டா மற்றும் ஏனைய நாடுகளில் பல பில்லியன் டொலர்களை மறைத்து வைத்துள்ளதாக ஜனாதிபதியான அனுரகுமார திசாநாயக்க சுமத்தியுள்ள குற்றச்சாட்டை நிரூபிக்குமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது திசாநாயக்கவின் காணொளி ஒன்றுக்குப் பதிலளித்த நாமல், ஜனாதிபதியும் அவரது குழுவினரும் பல வருடங்களாக பொது நிதி திருடப்பட்டதாகக் கூறி வருகின்றனர்.

தொடர்ச்சி P2



# ‘மத்திய கிழக்கு வெடிக்கிறது’

உடனடியாக பொதுமக்களுக்குச் சமிக்ஞை ஒலி மூலம் எச்சரிக்கை விடுக்கப்பட்டு அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லும் பணிகளை அந்நாட்டு அரசு முடுக்கி விட்டது

ஈரானின் இந்த ஏவுகணை தாக்குதல்கள் மூலமாக மத்திய கிழக்கில் சமீப நாட்களாக எப்போது வேண்டுமானாலும் நிகழலாம் என்று எதிர்பார்க்கப்பட்டு வந்த இஸ்ரேல் மீதான ஈரானின் தாக்குதல் நிஜமாகியுள்ளது.

இஸ்ரேல் மீது ஈரான் சுமார் 200 பேலிஸ்டிக் ஏவுகணைகளைக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது.

இதுகுறித்து இஸ்ரேலுக்கு முன்பே எச்சரித்திருந்த அமெரிக்கா, ஈரானின் ஏவுகணைகளை வழியிலேயே இடைமறித்து அழிக்க இஸ்ரேலுக்கு உதவி புரிந்ததாகக் கூறியுள்ளது.

பேலிஸ்டிக் ஏவுகணைகளைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தியதை ஈரான் உறுதிப்படுத்தியுள்ளது. இஸ்ரேல் பதில் தாக்குதலில் ஈடுபட்டால் மேலும் தாக்குதல் தொடுப்போம் என்று ஈரான் மிரட்டல் விடுத்துள்ளது. இது ஈரான் புரட்சிகர காவல் படையின் முதல் தாக்குதல் என்று ஈரான் பாராளுமன்றத்தின் தேசியப் பாதுகாப்பு மற்றும் வெளியுறவு குழு தலைவர் இப்ராகிம் அஸிஸி தெரிவித்துள்ளார்.

“இஸ்ரேலின் இராணுவ மையங்கள் மற்றும் தளவாடங்களே எங்கள் இலக்காக இருந்தன. கணிப்புகள் ஒருவேளை தவறானால் பொதுமக்களும் கூட பாதிப்புகளைச் சந்திக்கும் நிலையும் வரலாம். இஸ்ரேல் மீண்டும் தவறிழைத்தால் அடுத்தகட்டமாக இரண்டாவதாக நடத்தப்படும் தாக்குதல் பேரழிவை ஏற்படுத்துவதாக இருக்கும்” என்று அவர் கூறினார்.

இந்நிலையில், மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான ஈரானுக்கு இந்தியர்கள் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

எதிர்பார்க்கப்பட்ட படியே இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியுள்ள நிலையில், இஸ்ரேல் இனி என்ன செய்யப் போகிறது? மத்திய கிழக்கில் நிலை கொண்டுள்ள அமெரிக்க இராணுவம் என்ன செய்கிறது? மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அதிகரிக்கும் பதற்றம் உலகளாவிய அளவில், குறிப்பாகக் கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் என்ன? உள்ளிட்ட விடயங்கள் கேள்வியை ஏற்படுத்தியுள்ளன.

# “உறவினர்கள் அஞ்ச வேண்டாம்”

ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களால் தற்காலிகமாக நிறுத்தப்பட்ட டெல் அவிவ் சர்வதேச விமான நிலையத்தில் விமானச் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையிலிருந்து இஸ்ரேலுக்கு வர விரும்பும் பயணிகளும், இஸ்ரேலிலிருந்து இலங்கை செல்ல விரும்பும் பயணிகளும் விமான நிலையத்திற்குச் செல்வதற்கு முன் தங்கள் பயணத்திற்குத் தேவையான விமானம் இயக்கப்படுகிறதா என்பதைச் சரிபார்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜில்மாட் காதலி சிக்கினார்

பொலிஸ் நிலையத்திலேயே பிரச்சினையையும் ஏற்படுத்திவிட்டார். இதனால், பொலிஸ் உத்தியோகத்தரை அங்கிருந்து வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் செய்தனர்.

இந்நிலையில், அப்பெண்ணின் நிலையைக் கேட்டறிந்துகொண்ட அங்குக் கடமையிலிருந்த காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதியைச் சேர்ந்த பெண் பொலிஸ் உத்தியோகத்தர், தற்காலிகமாகத் தங்குவதற்கு இடமில்லாததால் தனது வீட்டில் தங்கவைத்ததுடன் அவர் வெளியில் செல்லும் போது அவரையும் அழைத்து வீட்டைப் பூட்டி அதன் திறப்பை வெளியில் வழமையாக வைக்கும் இடத்தில் வைத்துவிட்டுச் சென்று வந்துள்ளார்.

இவ்வாறு 3 தினங்கள் கடந்த நிலையில் ஜூன் 10 ம் திகதி குறித்த பெண் தான் வீட்டிற்குப் போவதாகத் தெரிவித்து அங்கிருந்து வெளியேறிக் குறித்த வீட்டிற்கு அருகாமையில் ஒளித்திருந்து, பெண் பொலிஸ் உத்தியோகத்தர் வீட்டிலிருந்து சென்றதும் வீட்டிலிருந்த 9 பவுண் தங்க ஆபரணங்களைத் திருடிச் சென்றுள்ளார்.

கடமை முடிந்து வீட்டிற்குத் திரும்பிய பெண் பொலிஸ் உத்தியோகத்தர் தங்க ஆபரணங்கள் திருட்டுப்போயுள்ளதைக் கண்டுகொண்டு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் மேற்கொண்ட நிலையில் குறித்த பெண்ணை திங்கட்கிழமை (30) ஒட்டிசுட்டானில் காத்தான்குடி பொலிஸார் கைது செய்ததுடன், திருடப்பட்ட தங்க ஆபரணங்களை மீட்டனர்.

கைதான பெண்ணை செவ்வாய்க்கிழமை (01) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் முன்னிறுத்தியபோது, அவரை எதிர்வரும் 14ம் திகதிவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிலிண்டரா? யானையா? ஆராய்கிறது ஐ.தே.க.

எரிவாயு சிலிண்டர் அல்லது யானையைத் தெரிவு செய்து அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிட ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவில் இணக்கம் காணப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

செயற்குழு பரிசீலிக்கும் பிரேரணையை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் ருவான் விஜயவர்தன குறிப்பிட்டுள்ளார்.

பொதுத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு மற்றும் பல விசேட கூட்டங்கள் முன்னாள் ஜனாதிபதி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்றதுடன், இவ்விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்டத் தலைவர்கள், தொகுதி அமைப்பாளர்கள், முகாமையாளர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# அநுரவுக்கு நாமல் சவால்

“ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் அவரது குழுவினரும் நாங்கள் உகண்டாவிலும் பல்வேறு நாடுகளிலும் பில்லியன் கணக்கான டொலர்களை பதுக்கி வைத்துள்ளோம் என்று குற்றம் சுமத்தி வருகின்றனர்.

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க தனது குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டிய நேரம் இது” என்று ராஜபக்ச ‘எக்ஸ்’ தளத்தில் பதிவிட்டுள்ளார்.

WCIC
Women's Chamber of Industry and Commerce
Engage - Empower - Enrich
In Collaboration with
USAID
FROM THE AMERICAN PEOPLE

WCIC
மேன்மைக்கு கௌரவம்
Women Entrepreneur Awards
வலுவூட்டல் AIA INSURANCE

இலங்கையின் சாதனைமிக்க மகளிர் தொழில்முனைவோரை அழைக்கின்றோம்

இலங்கையின் மகளிர் தொழில்முனைவோருக்கு அழைப்பு!!
தொழில்முனைவோருக்கான ம.தொ.வ.ச பிரதிபாபிஷேக மகளிர் தொழில்முனைவோர் விருதுகள் 2024

விண்ணப்ப வகைகள்: வணிக விருதுகள் - தொடக்க, மைக்ரோ, சிறிய, நடுத்தர மற்றும் பெரிய.
மாகாண விருதுகள் - ஒவ்வொரு மாகாணத்திலும் சிறந்தவை.

வெற்றிகரமான விண்ணப்பதாரர்கள் டிஜிட்டல் தொழில்முனைவோர், புத்தாக்கமுள்ள தொழில்முனைவோர், சமூக தொழில்முனைவோர், சிறந்த ஸ்டார்ட் அப், மிகச் சிறந்த ஏற்றுமதி சார்ந்த தொழில்முனைவோர், மிகவும் நேர்மறையாகத் திறன் கொண்ட தொழில்முனைவோர் (உற்பத்தி மற்றும் சேவை), இளம் பெண் தொழில்முனைவோர் மற்றும் 2024 ஆம் ஆண்டின் மிக சிறந்த பெண் தொழில்முனைவோர் போன்ற சிறப்பு விருதுகளுக்கு பரிசீலிக்கத் தகுதியுடையவர்கள்.

என்ட்ரி கிட்டினை www.wcicsl.lk தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்யப்பட்ட என்ட்ரி கிட்டினை சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் நுழைவுக் கட்டணச் சான்றுடன் WCICக்கு 2024 அக்டோபர் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன் அனுப்ப வேண்டும்.

அனுசரணையாளர்கள்
பிளட்டினம் | டயமண்ட் | ஒத்துழைப்புப் பங்காளர் | கோல்ட் | சில்வர் | ப்ரோன்ஸ்
AIA HEALTHIER, LONGER, BETTER LIVES | DFCC Aloka (Banking Partner) | USAID | McLARENS GROUP SUNQUICK | The World Of Hayleys | IMPRA

ஊடக பங்காளர்-அச்சு/சமூக ஊடகம்
wijeya newspapers | the SUNDAY TIMES | DailyMirror | Daily FT | தமிழ்Mirror | Daily FT ONLINE | DailyMirror ONLINE | தமிழ்Mirror ONLINE

அறிவுசார் பங்காளர் EY Building a better working world
தொடர்பாடல் பங்காளர் triad

மகளிர் தொழில்துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் இலங்கை
இல.380/110, சரண வீதி, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07, இலங்கை, தொ.பே: 0112671762, மொபைல்: 0766848080

# “முன்னாள் எம்.பிக்கு விருப்பமே இல்லை”



மக்கள் மனங்களில் ஏற்பட்டிருக்கும் இந்த மன மாற்றத்துக்கு நாம் தடையாக இருக்க முடியாது. அதற்கு வழிவிட வேண்டியது தவிர்க்க முடியாததாகும். மக்கள் மனங்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, ஏற்றுக் கொண்டு இளைஞர்களுக்கும், புதியவர்களுக்கும் இடம் கொடுப்பதே அரசியல் கட்சிகளினதும், தலைவர்களினதும் தலையாய கடமையாக இருக்கவேண்டும்.

என்னுடையதும் ஏனைய சில முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களதும் போட்டியிடாதிருக்கின்ற முடிவு ஏனையவர்களும் உணர்ந்து முடிவெடுக்க உந்துதலாக அமையும் என கருதுகின்றேன்.

வன்னி மாவட்டத்தில் அரசியல் தெளிவுள்ள, ஆளுமைமிக்க இளம் தலைவர்களைப் பாராளுமன்றம் அனுப்ப வேண்டும் என்ற மக்களின், இளைஞர்களின் விருப்பங்கள் நிறைவேற மக்கள் மனதறிந்து எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என முடிவெடுத்துள்ளேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இலங்கையர்களுக்கு ஜப்பானிய மொழி



ஊழலற்ற சிறந்த ஆட்சியை உருவாக்கும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு ஜப்பானிய அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கும் என இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகோஷி ஹிதேயாகி (Mizukoshi Hideaki தெரிவித்தார். ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மற்றும் இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிசுகோஷி ஹிதேயாகி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்று ஜனாதிபதி அலுவலகத்தில் புதன்கிழமை (02) இடம்பெற்றது.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட அனுரகுமார திசாநாயக்கவிற்கு தனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜப்பானியத் தூதுவர், ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கு ஜப்பான் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர ஆர்வமுள்ள துறைகள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டதுடன், எதிர்காலத்தில் இரு நாடுகளும் நட்பு நாடுகளாக நெருக்கமாக பணியாற்றவும் உடன்பாடு காணப்பட்டது.

தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி அனுகுமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ளவாறு ஊழலற்ற மற்றும் சிறந்த ஆட்சியை உருவாக்குவதில் கவனம் செலுத்தியிருப்பது தொடர்பில் ஜப்பானியத் தூதுவர் பாராட்டு தெரிவித்ததுடன், அந்த வேலைத்திட்டத்திற்கு ஜப்பான் பூரண ஆதரவை வழங்கும் எனவும் உறுதியளித்தார்.

ஜெயிக்கா நிதியத்தின் கீழ், ஆரம்பிக்கப்பட்ட கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய (BIA) விஸ்தரிப்பு மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்பு டிஜிட்டல் மயமாக்கல் திட்டம் போன்ற திட்டங்களை மீண்டும் நடைமுறைப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் அவர் தெளிவுபடுத்தினார்.

அத்துடன், இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்தும் வகையில், ஜப்பானிய மொழியை கற்கவும் ஜப்பானில் தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு இலங்கையர்களுக்குச் சந்தர்ப்பம் பெற்றுக் கொடுப்பதாகவும் ஜப்பானியத் தூதுவர் மிசுகோஷி ஹிதேயாகி ஜனாதிபதியிடம் உறுதியளித்தார்.

# நேரடி வெளிநாட்டு முதலீடுகளுக்கு ஒத்துழைப்பு



இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பெட்ரிக், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் புதன்கிழமை (02) சந்தித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் இந்த விஜயம் ஒரு முக்கியமான முன்னெடுப்பாக அமைந்துள்ளது.

இச்சந்திப்பில் உயர்ஸ்தானிகர் பெட்ரிக், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வெற்றிபெற்றமைக்காக வாழ்த்துத் தெரிவித்ததோடு, பிரித்தானிய அரசாங்கமும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் தலைமைத்துவத்திற்குப் பாராட்டு தெரிவிக்கும் வகையில், III சார்ள்ஸ் மன்னர் மற்றும் பிரித்தானியப் பிரதமர் சேர் கீர் ஸ்டார்மர் (Sir Keir Starmer) ஆகியோரின் பிரத்தியேக வாழ்த்துச் செய்திகளையும் பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கையளித்தார்.

நேரடி வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கான இலங்கையின் முயற்சிகளுக்குப் பிரித்தானிய அரசாங்கம் தொடர்ச்சியான ஆதரவை வழங்குமென உறுதியளித்த உயர்ஸ்தானிகர், கல்வித்துறை உறவுகளின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார். அதேபோல, சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளுக்கும் பிரித்தானிய அரசாங்கத்தின் உதவி கிட்டுமென உறுதியளித்துள்ளார்.











## மகாத்மா காந்தியின் 155ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம்

**நிதர்ஷன் வினோத்**


மகாத்மா காந்தியின் 155ஆவது பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் திங்கட்கிழமை(02) காலை இடம்பெற்றன.

யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் இந்திய துணைத்தூதர் சாய் முரளி , வடமாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா,யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி,யாழ் மாநகர ஆணையாளர் கிருஷ்ணேந்திரன், யாழ்ப்பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் யருள் மற்றும் சமய சமூக பிரதிநிதிகள், இந்திய துணைத்தூதரக அதிகாரிகள், அகில இலங்கை காந்தி சேவா சங்க பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளால் துவிசக்கர வண்டி பவனியொன்றும் மேற்கொள்ளப்பட்டதுடன், யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பங்கேற்புடன் மரநடுகையும் இடம்பெற்றது.

## ஓட்டோ விபத்தில் சாரதி பலி



மாத்தறை, தெனியாய பிரதேசத்தில் புதன்கிழமை (02) காலை இடம்பெற்ற விபத்தில் சாரதி உயிரிழந்துள்ளதுடன், அவரின் இரு பிள்ளைகள் காயமடைந்துள்ளனர்.

விபத்தின் போது, சாரதியான தந்தை மதுபோதையில் இருந்ததாகவும் இதனால், முச்சக்கரவண்டி கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிக் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதாகவும் தெரியவந்துள்ளது.

விபத்தில் சாரதியான தந்தையும், ஓட்டோவின் பின்புறத்தில் அமர்ந்திருந்த இரண்டு பிள்ளைகளும் காயமடைந்துள்ள நிலையில், தெனியாய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் தந்தை உயிரிழந்துள்ளார்.

## 17 வயதுடைய சிறுவன் கொலை

மஹவெல, மடவல பிரதேசத்தில் பொல்லால் மற்றும் தலைக்கவசத்தால் தாக்கப்பட்டு 17 வயதுடைய சிறுவன் கொலை செய்யப்பட்டுள்ளதாக மஹவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதுடன், இது தொடர்பில் மடவல பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஏனைய சந்தேக நபர்கள் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகவும், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் மஹவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கலந்துரையாடல்

**எம்.எஸ்.எம்.நூர்தீன்**



பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகருமான ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் உயர் பொலிஸ் அதிகாரிகளுடனான கலந்துரையாடல்,பழைய மாவட்ட செயலகத்தில் புதன்கிழமை (02) இடம்பெற்றது.

உதவி தேர்தல்கள் ஆணையாளர் எம்.எ.எம். சுபியானின் ஏற்பாட்டில் இக்கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், இதன்போது தேர்தல்களின் போது பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

### அதிக கட்டணத்தை அறவிட்டால்

## “முறையிடவும்”

பயணிகளிடமிருந்து அதிக கட்டணம் அறவிடும் பஸ்கள் தொடர்பில் முறையிட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை (01) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 4.24 சதவீதமாக பஸ் கட்டணம் குறைக்கப்பட்டது. ஆரம்ப கட்டணம் 27 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில், நிர்ணயிக்கப்பட்ட பஸ் கட்டணத்தை விட அதிக கட்டணம் அறவிடும் பஸ்கள் தொடர்பில் 1955 அல்லது 071 25 95 555 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு முறையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிக கட்டணம் அறவிடும் பஸ்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## புற்றுநோய் தொடர்பான விழிப்பூட்டல் செயலமர்வு





சம்மாந்துறை- கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியைகள் மற்றும் மாணவிகளுக்கான மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்பூட்டல் செயலமர்வு திங்கட்கிழமை (30) இடம்பெற்றது.

புற்றுநோயின் கோரப் பிடியில் இருந்து அனைவரையும் பாதுகாக்கும் பொருட்டு நடாத்தப்பட்டு வரும் Cancer Prevention நிகழ்ச்சி நிரலின் தொடரில் பாடசாலை மட்டத்தில் நடாத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சியை சம்மாந்துறை கல்வி வலய கல்விப் பணிப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பு செய்து வழிநடத்திய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எச். நைரூஸ்கான் (SLEAS) உட்பட, பாடசாலை வளாகத்தில் புற்றுநோய் தொடர்பாக மாணவச் சமூகத்தை விழிப்பூட்டும் பொருட்டு ஏற்பாடுகளைச் செய்த அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கும் தமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாகச் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

## கார் குறித்து ரோசி விளக்கம்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் தனக்கு Porsche Cayenne கார் வழங்கப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த ரோசி சேனாநாயக்க, அந்த வாகனம் தான் அவ்வப்போது பயன்படுத்திய எட்டு வாகனங்களில் ஒன்று என தெரிவித்துள்ளார்.

கொழும்பில் புதன்கிழமை (10) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே கொழும்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் ரோசி சேனாநாயக்க, மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் ஜனாதிபதியின் ஆலோசகராக இருந்த காலத்தில் எட்டு வாகனங்களைப் பயன்படுத்தியதாகவும், ஆட்சி மாற்றத்திற்கு முன்னர் கடைசியாகப் பயன்படுத்தப்பட்ட வாகனம் போர்ஷே கெயின் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், 2023ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அனைத்து வாகனங்களும் பழுதடைந்த பின்னர் மாற்றப்பட்டன. நான் மொத்தம் எட்டு வாகனங்களைப் பயன்படுத்தியிருந்தேன். எனது இறுதி வாகனம் பழுதடைந்தவுடன், ஜனாதிபதி அலுவலகம் எனக்கு பராமரிக்கப்படாத போர்ஷே கெய்னை வழங்கியது.

உடனடியாக வாகன விநியோகப் பொறுப்பாளரைத் தொடர்பு கொண்டு வேறு வாகனத்தைக் கோரினேன். அதற்கு மாற்றாக வேறு வாகனம் கிடைக்கும் வரை அந்த வாகனத்தைப் பயன்படுத்துமாறு அவர் எனக்கு அறிவுறுத்தினார். போர்ஸ் கேயென் பயன்படுத்தப்பட்ட உடனேயே பழுதடைந்தது மற்றும் பரிமாற்றத்திற்காக அனுப்பப்பட்டது.

மேலும், தனக்கு வழங்கப்பட்ட Porsche Cayenne கார் பழுதடைந்து வருவதாகவும், கதவுகள் திறக்கப்படாததாலும், கூரையின் ஊடாக நீர் கசிவதாகவும் தெரிவித்த ரோஸி சேனநாயக்க, தனது பதவிக்காலத்தில் தான் சொகுசு வாழ்வை அனுபவிக்கவில்லை எனவும் மறுத்துள்ளார்.

புதிய நிர்வாகம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்ட அரசாங்க வாகனங்கள் குறித்து வெளியிட்ட பட்டியல், சமூக ஊடகங்களில் பரவியதையடுத்து அவர் இவ்வாறு விளக்கமளித்தார்.



## கண்டியில் தனியார் நிறுவனத்துக்கு தடை

‘தெடிகம’ நாமத்தைத் தவறாகப் பயன்படுத்தித் தங்க அடகு வியாபாரத்தில் ஈடுபட்ட கண்டியில் தனியார் நிறுவனமொன்றுக்குத் தடை உத்தரவு

‘தெடிகம’ என்ற பெயரைப் பயன்படுத்தி மக்களைத் தவறாக வழிநடத்தித் தங்க அடகு வியாபாரத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் கண்டியில் தனியார் நிறுவனமொன்றுக்கு தெடிகம என்ற வர்த்தக நாமத்துடன் கூடிய வர்த்தக முத்திரையைப் பயன்படுத்த கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.பெர்ணாந்து இடைக்கால தடையுத்தரவு விதித்தார்.

தெடிகம என்ற வர்த்தக முத்திரை பயன்படுத்த தனக்கு உரிமை இருப்பதாகப் பிரதிவாதி தரப்பில் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனையை நிராகரித்து இந்த தடை உத்தரவு விதிக்கப்பட்டது.

தெடிகம வர்த்தக நாமத்தை ஒத்த பெயர்களைப் பயன்படுத்தி நியாயமற்ற போட்டியில் ஈடுபடுவதைத் தடை செய்து குருநாகல் வீதி, கட்டுகஸ்தோட்டை, கண்டி, விலாசத்தில் இயங்கும் டி.ஏ.சி.பி. தெடிகம அடகு தனியார் நிறுவனத்திற்கு எதிராக இந்தத் தடையுத்தரவு வழங்கப்பட்டது.

தெடிகம அடகு நிலையம், தெடிகம தங்கக் கடன் நிலையம், தெடிகம அடகு தரகர்கள், ஆகிய வர்த்தக நாமங்களைப் பயன்படுத்துதல் தெடிகம பெயரில் விளம்பரம் செய்தல், தெடிகம என்ற பெயரில் புதிய கடைகளைத் திறப்பது என்பவற்றுக்கு எதிராக இந்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தெஹிவளை வீதி, மஹரகம தெடிகம குரூப் பிரைவேட் லிமிடெட் மற்றும் அதன் தலைவர் ரஞ்சன் மலின் தெடிகமவினால் புலமைச் சொத்து சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த மனுவை விசாரணை செய்த பின்னர் இந்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சுதத் பெரேரா அசோசியேட்ஸின் ஆலோசனையின் பிரகாரம்,சட்டத்தரணி மனோஜ் பண்டார நீதிமன்றில் ஆஜரானார். தெடிகம மீதான மக்களின் நம்பிக்கையையும் நற்பெயரையும் பயன்படுத்திப் பிரதிவாதி நிறுவனம் போலியான வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்ட அவர் 1950இல் நிறுவப்பட்ட தெடிகம குரூப் பிரைவேட் லிமிடெட், இலங்கை முழுவதும் 281 கிளைகளை நிறுவியுள்ளது என்றும் தெரிவித்தார். மேலும் 2023ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச் சொத்துரிமைச் சட்டத்தின் 144ஆவது பிரிவின்படி, பிரதிவாதி இந்தப் பெயரைப் பயன்படுத்தி மக்களைத் தவறாக வழிநடத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதிவாதி சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி குவேரட சொய்சா ஆஜரானார். தமது கட்சிக்காரரின் பெயரி தெடிகம என்று வருவதாலே அதனைப் பயன்படுத்தியதாகவும் மனுவை நிராகரிக்குமாறும் அவர் கோரினார் அவரின் கோரிக்கையை நிராகரித்த நீதவான் தெடிகம என்ற பெயரைப் பயன்படுத்த இடைக்கால தடைவிதித்தார்.

**விற்பனைக்கு**

நுகேகொட நகரில் இருந்து 250 மீட்டர் தூரத்தில், 5 பேர்ச் காணியுடன் வீடு விற்பனைக்கு உள்ளது. தொடர்புகொள்க 0760348281, 0776690948

# அம்மாக்களுக்கான பரீட்சையும் குழந்தைகளின் மனநிலையும்

நமது நாட்டில் பாடசாலைக் கல்வியில் மூன்று முக்கியமான மற்றும் சர்ச்சைக்குரிய பரீட்சைகள் உள்ளன. அதாவது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சை. இந்த பரீட்சை காலத்தில், பரீட்சை எழுதும் மாணவர்களை விட, பரீட்சைக்கு முன்னும் பின்னும் பதிவாகும் முறைகேடுகள் மீதே முழு நாட்டினதும் கவனம் அதிகமாக உள்ளது.

இந்த ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை கடந்த 15ஆம் திகதி நடைபெற்றது. மாணவர்கள் விடையளிக்கும் முன் வினாத்தாள் வெளியான சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் நடத்தப்பட்டு பலரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வினாத்தாளைக் கையடக்கத் தொலைபேசியில் புகைப்படம் எடுத்துப் பல பிரத்தியேக ஆசிரியர்களிடம் கொடுத்து, அனுராதபுரம், நொச்சியாகமம், கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளுக்கு அனுப்பப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின. அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னரே சிலர் கைது செய்யப்பட்டனர்.

எனினும், மூன்று கேள்விகளுக்கு முழு புள்ளியையும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர், விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகளை இரண்டுவாரங்களுக்கு இடைநிறுத்துமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பணித்தார்.

எனினும், பரீட்சைகளை மீள நடத்துமாறு சில ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான சம்பவங்களைக் கடந்த காலங்களிலும் தாங்கள் கேள்விப்பட்டிருப்பதாகவும், அந்த வழக்குகளில் குற்றவாளிகளுக்கு உரிய முறையில் தண்டனை வழங்கப்பட்டிருந்தால், இன்று இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றிருக்காது எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

அரசால் நடத்தப்படும் பரீட்சையின் வினாத்தாளைப் பணத்திற்காகப் பெற்றுக்கொள்ள முடியுமென்றால், மூன்று வருடங்கள் பிள்ளைகளுக்குப் பாடம் நடத்துவதற்கு அரசாங்கமும், பெற்றோர்களும் அதிகப் பணம் செலவழிக்க வேண்டிய அவசியமில்லை என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

புலமைப்பரிசில் பரீட்சை குழந்தைகள் தேசிய அளவிலான பரீட்சையை எதிர்கொள்ளும் முதல் முறையாகும். பெற்றோரின் ஆர்வத்தின் அடிப்படையில் தங்கள் மகன் அல்லது மகளுக்கு வழிகாட்டுவதன் மூலம், பெற்றோர்கள் தங்கள் குழந்தையை அதிக மதிப்பெண்களைப் பெற வைக்க முயற்சி செய்கிறார்கள். அதற்காகப் பெற்றோர்கள் செய்யாதது எதுவுமில்லை.

நள்ளிரவில் கூட புலமைப்பரிசில் வகுப்புகளுக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்வது முதல் தெய்வ வழிபாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்களைப் பெற்றோர்கள் செய்கிறார்கள். அதனால்தான் பலர் இந்த பரீட்சையை அம்மாக்களுக்கான பரீட்சை என்று அழைக்கிறார்கள். பரீட்சையை முடித்துவிட்டுத் திரும்பி வரும் குழந்தையைப் பார்க்க, சிரித்த முகத்துடன் குழந்தைகளும், வீடுகளில் உள்ளவர்களும் காத்திருக்கிறார்கள். புலமைப்பரிசில் பரீட்சை முடியும் வரை, சகலவிதமான சுற்றுலாக்களையும் இரத்து செய்கின்றன. ஆனால், கஷ்டப்பட்டுச் சம்பாதித்த தேர்வை இரத்து செய்து விட்டு மீண்டும் எழுதுவது குழந்தையின் மனதை மிகவும் குழப்பமான அனுபவமாக இருக்கும். இது குழந்தைகளை விட பெற்றோருக்குத்தான் அதிக வேதனை தரும் என்பதில் சந்தேகமில்லை.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

தெருவோரங்களில் குப்பை கொட்டுபவர்கள், தங்கள் வீடுகளின் முன்னால் கொட்ட மாட்டார்கள். ஆனால், இரவுப் பொழுதில், அதிகாலையில் திருடர்கள் போல வந்து, தங்களின் வீட்டுக் கழிவுகளை, ஊரவர்களின் வீடுகளுக்கு முன்னால் போடுவது வாடிக்கையான செயலாகி விட்டது.

நகரங்களில், பொது இடங்களில் தெருக்களிலும் இத்தகைய செயல்களை அச்சமின்றி செய்கின்றார்கள். பொலிஸாரோ, உள்ளூராட்சி மன்றங்களோ அல்லது பொதுமக்களோ இதைக் கண்டுகொள்வதில்லை.

மேலும், வெற்றிலையை வாயில் குதப்பியவாறு, அதைப் பொதுமக்கள் நடந்து செல்லும் பாதையில் துப்பி விடுகின்றவர்கள்; மனச்சாட்சி இல்லாத பேர்வழிகள்.

முக்கியமாக, பஸ் தரிப்பிடத்துக்கு வந்து போகும் பயணிகளில் அநேகர், எந்த வித வெட்கமும் இன்றி, இரத்த நிறத்தில் வெற்றிலையைத் துப்பிச் செல்கின்றார்கள். எவருமே இதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். பயணம் செய்தபடி இருக்கும் வாகனங்களில் இருப்போர், ஜன்னல் வழியாக எச்சில் துப்புவதால், வழியில் செல்பவர்கள், அருவருப்புடன் கோபத்துக்கு உள்ளாகின்றார்கள்.

இந்த அநியாயங்கள் எப்பொழுது நிறுத்தப்படும்? சுகாதாரம் இன்றி வாழ்வது சிலருக்கு விருப்பமான விடயமாகி விட்டது.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# வாய்ப் பேச்சு பேசும் வீரர்கள் அல்ல சூரர்களாம்

முருகானந்தம் தவம்

நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று முடிந்த நிலையில், எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி 10ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் இடம்பெறவுள்ளது. இதனால் இந்த பாராளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள 9ஆவது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய எம்.பிக்கள், முன்னாள் எம்.பிக்கள் மற்றும் தாமும் ஒரு எம்.பியாகி விட வேண்டுமென விரும்புவோரும் தயாராகி வருகின்றனர். இவ்வாறான நிலையில், பாராளுமன்றத்திற்கு இவர்களை அனுப்பி வைக்கும் வாக்காளர்களான மக்கள் 'வாக்கு' எனும் தமது ஆயுதத்தை பயன்படுத்தும் போது, பாராளுமன்றம் தொடர்பிலும் அங்கு தம்மால் ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்ட எம்.பிக்கள் தமது மக்களுக்காக செயற்பட்ட விதம் தொடர்பிலும் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசியம்.

இவ்வாறு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தனிக்கட்சியாகவோ அல்லது மற்ற கட்சிகளுடன் அல்லது அரசுடன் சேர்ந்து தமது மக்களின் நலன்களுக்காக செயற்பட வேண்டும். தம்மை மக்கள் ஏன் பாராளுமன்றத்திற்கு அனுப்பினார்கள் என்பதை உணர்ந்தும், வாக்களித்தவர்களுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்கும் மக்கள் தமக்குக் கொடுத்த உயர்நிலை வாழ்க்கைக்குப் பிரதி உபகாரமாகவேனும் அந்த மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையாவது பாராளுமன்ற சிறப்புரிமைகளுக்கு ஊடாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும்.

இலங்கைப் பாராளுமன்றத்திலுள்ள 225 எம்.பிக்களில் 196 எம்.பிக்கள் 22 தேர்தல் மாவட்டங்களிலிருந்து பொது வாக்கெடுப்பின் மூலமும், மிகுதி 29 எம்.பிக்கள் தேசிய அளவில் கட்சிகள் பெறும் வாக்கு எண்ணிக்கைக்கேற்ப கட்சிகளின் தேசியப் பட்டியலிருந்தும் தெரிவு செய்யப்படுகின்றனர். தற்போது பாராளுமன்றத்தில் உள்ள 15 சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையக அரசியல் கட்சிகளைப் பிரதி நிதித்துவப்படுத்தி 176 சிங்கள எம்.பிக்களும் 21 முஸ்லிம் எம்.பிக்களும் 19 தமிழ் எம்.பிக்களும் 9 மலையக தமிழ் எம்.பிக்களுமாக 225 எம்.பிக்கள் உள்ளனர்.

இவர்கள் தமது மக்களுக்காகக் கடந்த பாராளுமன்றத்தில் எவ்வாறு செயற்பட்டார்கள் என்பது தொடர்பில் manthri.lk என்ற பிரபல இணையத்தளம் ஆய்வொன்றை நடத்தியது. இதில் எம்.பிக்களாக இருக்கும்போதே காலமானவர்கள், பதவி விலகியவர்கள், அவர்களுக்குப் பதிலாகப் பதவியேற்றுக் கொண்டவர்களும் கணக்கில் எடுக்கப்பட்டதால் மொத்த எம்.பிக்களின் எண்ணிக்கை 238 வரையுள்ளது.

பாராளுமன்றத்தைப் பொறுத்தவரையில், எம்.பிக்கள், தம்மைத் தெரிவு செய்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை, நியாயங்களைப் பெற்றுக்கொடுக்கக் கூடிய வசதி வாய்ப்புகள் பல இருக்கின்றன. பாராளுமன்ற அமர்வுகளின் போது, மனுக்கள் சமர்ப்பணம் அல்லது வாய்மூல விடைக்கான வினாக்களுக்கான நேரம் அல்லது சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை, தனி உறுப்பினர் பிரேரணை அல்லது 27/2 இன் அடிப்படையில் முன்வைக்கப்படும் விசேட கூற்று அல்லது பிரதமரிடத்திலான நேரடிக் கேள்வி நேரம், விவாதங்களில் பங்கேற்றல் என தமது மக்களின் பிரச்சினைகளைச் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப் பல வாய்ப்புகள் உள்ளன.

தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் எதிர்நோக்கும் நிர்வாக ரீதியான பிரச்சினைகளுக்கு பாராளுமன்ற உறுப்பினராக உள்ள ஒருவர் பாராளுமன்றத்திற்கு அவ்வாறான நிர்வாக ரீதியான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் நபர் தொடர்பான மனுக்களைச் சமர்ப்பிக்க முடியும். அவ்வாறு மனுவைச் சமர்ப்பிக்கும் போது, அந்த மனு பரிசீலனைக்காக பொது மனுக்கள் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுக் குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்வுகள் அல்லது அதற்கான பதில்கள் அதனுடன், தொடர்புபட்ட அமைச்சரினால் பெற்றுக்கொடுக்கப்படும்.

அதேபோன்று, வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது, பிரதமர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களிடம் தமது மக்களின் பிரச்சினை அல்லது தமது பிரதேசத்தின் பிரச்சினை அல்லது தமது மாவட்ட, மாகாணத்தின் பிரச்சினை அல்லது ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் ஒரு எம்.பி. பாராளுமன்றம் கூடும் நாட்களில் ஒரு நாளில் இரண்டு வினாக்களை எழுப்ப முடியும். இவ்வாறான வினாக்களுக்குச் சம்பந்தப்பட்ட அமைச்சரோ, இராஜாங்க அமைச்சரோ பிரதி அமைச்சரோ கண்டிப்பாகப் பதில் வழங்க வேண்டும். சில வேளைகளில், கால அவகாசம் கோரினாலும் அக்கேள்விக்கு அவர்கள் பதிலளித்தே ஆகவேண்டும். பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட கேள்வியாக இருந்தால் மட்டும் சில வேளைகளில் பதில் வழங்கப்படமாட்டாது.

தனிநபர் பிரேரணையும் இதுபோன்ற இவற்றைவிட, கட்சித் தலைவர் ஒருவரினால் 27/2 இன் அடிப்படையில் முன்வைக்கப்படும் விசேட கூற்று மிகமுக்கியமானது. பொதுமக்களின், நாட்டின் முக்கியம் கருதிய விடயங்கள் தொடர்பில் சபையில் கவனத்திற்குக் கொண்டுவந்து அது தொடர்பான பதிலையும், தீர்வையும் இதன்மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

இவற்றையும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்ற அமர்வுகளுக்கு சமூகமளித்த நாட்களையும் அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அமைச்சராக இருக்கும் பட்சத்தில் அவர் எம்.பிக்கள் முன்வைக்கும் பிரச்சினைகள், கேள்விகள் தொடர்பில் செயற்பட்ட விதம் என்பனவற்றைக் கவனத்தில் எடுத்தே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறான இந்த ஆய்வின் முடிவில் மலையக தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய 9 தமிழ் எம்.பிக்களின் மக்களுக்கான செயற்பாடுகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளமை தெரியவந்துள்ளது. இந்த ஆய்வில் கணக்கில் எடுக்கப்பட்ட 238 எம்.பிக்களில் மலையக தமிழ் மக்களுக்காக அதிகமாகக் குரல் கொடுத்துச் செயற்பட்ட ஒருவராக வேலுகுமார் 54ஆவது இடத்தைப்பெற்று முதலிடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்ததாக மலையக மக்கள் முன்னணித் தலைவரான இராதாகிருஷ்ணன் 68ஆவது இடத்திலும் உதயகுமார் 82ஆவது இடத்திலும் வடிவேல் சுரேஷ் 93ஆவது இடத்திலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலரான ஜீவன் தொண்டமான 111ஆவது இடத்திலும் தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரான மனோகணேசன் 141ஆவது இடத்திலும் அரவிந்தகுமார் 175ஆவது இடத்திலும் ராமேஸ்வரன் 184ஆவது இடத்திலும் தொழிலாளர் தேசிய சங்கத் தலைவரான திகாம்பரம் 226ஆவது இடத்திலும் உள்ளனர்.

இதற்கு அடுத்ததாக முஸ்லிம் எம்.பிக்களை எடுத்துக்கொண்டால், பாராளுமன்றத்தில் அதிக செயற்பாடுகளை வெளிப்படுத்தியவராக அலிசப்ரி 24ஆவது இடத்தைப்பெற்று முதலிடத்தில் உள்ளார் அவருக்கு அடுத்ததாக மரிக்கார் 28ஆவது இடத்திலும் முஷாரப் 34ஆவது இடத்திலும் முஜிபுர் ரஹ்மான் 37ஆவது இடத்திலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான ரவூப் ஹக்கீம் 43ஆவது இடத்திலும் கபீர் ஹாசிம் 53ஆவது இடத்திலும் இம்ரான் மஹ்ரூப் 72ஆவது இடத்திலும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரான ரிஷாத் பதியுதீன் 83ஆவது இடத்திலும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் 85ஆவது இடத்திலும் இஷாக் ரஹ்மான் 89ஆவது இடத்திலும் முஷம்மில் 92ஆவது இடத்திலும் தேசிய காங்கிரஸ் தலைவரான அதாவுல்லா 134ஆவது இடத்திலும் நசீர் அஹமட் 153ஆவது இடத்திலும் மஸ்தான் 168ஆவது இடத்திலும் ஹரிஸ் 176ஆவது இடத்திலும் பைசல் ஹாசிம் 196ஆவது இடத்திலும் தௌபீக் 208ஆவது இடத்திலும் அப்துல் ஹலீம் 210 ஆவது இடத்திலும் அலிஸாகிர் மௌலானா 222ஆவது இடத்திலும் அலிசப்ரி ரஹீம் 225ஆவது இடத்திலும் மர்ஜான் பளீல் 231ஆவது இடத்திலும் பௌசி 232ஆவது இடத்திலும் உள்ளனர்.

இதற்கு அடுத்ததாகத் தமிழ் எம்.பிக்களை எடுத்துக்கொண்டால் பாராளுமன்றத்தில் அதிக செயற்பாடுகளை வெளிப்படுத்தியவராக சிறிதரன் 12ஆவது இடத்தைப்பெற்று தமிழ், முஸ்லிம், மலையக எம்.பிக்களிடையில் முதலிடத்தில் உள்ளார். இவருக்கு அடுத்ததாகச் சாணக்கியன் 19ஆவது இடத்திலும், சார்ள்ஸ் நிர்மலநாதன் 26ஆவது இடத்திலும், கஜேந்திரன் 35ஆவது இடத்திலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் 62ஆவது இடத்திலும், சுமந்திரன் 64ஆவது இடத்திலும், சுரேன் ராகவன் 81ஆவது இடத்திலும், ஈ.பி.டி.பி தலைவரான டக்ளஸ் தேவானந்தா 86ஆவது இடத்திலும், ரெலோ இயக்கத்தலைவரான செல்வம் அடைக்கலநாதன் 105ஆவது இடத்திலும், கருணாகரம் 109ஆவது இடத்திலும், கலையரசன் 126ஆவது இடத்திலும், வினோநோகராதலிங்கம் 150ஆவது இடத்திலும், வியாழேந்திரன் 161ஆவது இடத்திலும், தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித் தலைவரான சந்திரகாந்தன் 162ஆவது இடத்திலும், புளொட் தலைவரான சித்தார்த்தன் 170ஆவது இடத்திலும், திலீபன் 188ஆவது இடத்திலும், தமிழ் மக்கள் கூட்டணி தலைவரான விக்னேஸ்வரன் 197ஆவது இடத்திலும், அங்கயன் இராமநாதன் 215ஆவது இடத்திலும், குகதாசன் 238ஆவது இடத்திலும் உள்ளனர்.

வெறுமனே வந்து பாராளுமன்ற கதிரைகளைச் சூடாக்கிவிட்டு, விவாதங்களில் வீர முழக்கமிட்டு பேசிவிட்டு, சலுகைகளை அனுபவித்து விட்டுச் சென்றால் மட்டும் போதாது. தமது மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க பாராளுமன்றத்தைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். பாராளுமன்றத்தில் எம்.பிக்களுக்குரிய சிறப்புரிமைகள், வசதிகள் தொடர்பில் மக்களுக்கு இதுவரை தெரியவராததாலேயே இவர்களில் பலரும் மீண்டும் மீண்டும் எம்.பிக்கள் ஆகிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஆய்வின் முடிவைப் பல எம்.பிக்கள் நிராகரிக்கலாம். நாம் பாராளுமன்றத்திற்கு சென்று வாய்ப் பேச்சு பேசும் வீரர்கள் அல்ல. மக்களுக்கான சேவைகளைச் செயலில் காட்டும் சூரர்கள் என தம்மை நியாயப்படுத்திக்கொள்ளலாம். ஆனால், இவர்களினால் தமது பிரதேசங்களில் என்ன அபிவிருத்திகள் நடந்துள்ளன. தமது பிரச்சினைகளுக்கு என்ன தீர்வுகள் கிடைத்துள்ளன என்பது மக்களுக்கு நன்கு தெரியும் என்பதனால், இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் மக்கள் தமது வாக்குகளைக் கடந்த பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய எம்.பிக்களின் மக்களுக்கான செயற்பாடுகளை நன்கு ஆராய்ந்தே பயன்படுத்துவார்கள் என்று நம்பலாம்.

## கடிதங்கள்

### அதிகாரிகள் முன்வர வேண்டும்

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட மஸ்கெலியா நகரில் உள்ள பல வீதிகள் குன்றும் குழியுமாக உள்ளதால் நகர் மக்கள் உட்பட பலர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக மத வழிபாடுகளுக்காக செல்லும் பாதசாரிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் பாடசாலை மாணவர்கள் குடியிருப்பாளர்கள் மழை நாட்களில் அவ்வீதியூடாக பயணிப்பதில் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அத்துடன் ஆலய வீதியில் உள்ள கழிவுநீர் செல்லும் வடிகாலில் கழிவுகள் மற்றும் கழிவு மண் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் மற்றும் நுளம்பு தொல்லை அதிகரித்து உள்ளது.

சம்பந்தப்பட்ட மஸ்கெலியா பிரதேச சபை முன் வந்து வீதிகளைச் செப்பனிடுவதுடன் கழிவு நீர் செல்லும் வடிகாலில் உள்ள அனைத்து குப்பைகள் மற்றும் மண்ணை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– மஸ்கெலியா நிருபர்



# காலத்தின் கட்டாயத்தில் மானுடர்கள் உள்ளனர்

## வாயில்லா ஜீவராசிகளின் உரிமைகளைப் பேசும் உலக விலங்குகள் தினம்



ச.தனுஷ்கா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

INTRO–உலக விலங்கு நாள் ஆண்டு தோறும் அக்டோபர் 4 அன்று கொண்டாடப்பட்டு வருகிறது. உலக விலங்கு தினத்தின் நோக்கம், உலகெங்கிலும் உள்ள விலங்குகளின் நிலையை மேம்படுத்துவதற்காக,அவற்றிற்காக உலகெங்கிலும் இருக்கின்ற விலங்கு நலன்புரி அமைப்பின் தரங்களை உயர்த்துவதாகும். உலக விலங்கு தின கொண்டாட்டத்தை உருவாக்குவதன் மூலமாக விலங்கு நல இயக்கத்தை ஒன்றிணைத்து,உலகளாவிய சக்தியாக அணிதிரட்டி உலகத்தை அனைத்து விலங்குகளுக்கும் ஏற்ற சிறந்த இடமாக மாற்றுவதே ஆகும். இது தேசியம், மதம், நம்பிக்கை அல்லது அரசியல் சித்தாந்தத்தைப் பொருட்படுத்தாமல் ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு வழிகளில் கொண்டாடப்படுகிறது.
தற்போது விலங்குகளின் மீது அதிகரித்துள்ள விழிப்புணர்வு மற்றும் கல்வியின் மூலம் விலங்குகளை எப்போதும் உணர்வுள்ளனவாக அங்கீகரிக்கும் ஒரு உலகத்தை நாம் உருவாக்க முடியும். மேலும் விலங்குகளின் நலனுக்கு முழு மரியாதை வழங்கக்கூடிய மனிதர்களை உருவாக்க முடியும்.

இந்நாளில் விலங்குகளின் அனைத்து வாழ்க்கை முறைகள் கொண்டாடப்பட்டு உலகனைத்தும் முக்கிய நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இயற்கை ஆர்வலரும் விலங்குகளின் தெய்வமாக மதிக்கப்படுபவருமான பிரான்சிஸ் அசிசி என்பவரின் வணக்க நிகழ்வு அக்டோபர் 4இல் வருவதால் இந்நாள் வன விலங்கு நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.அநேகமான கிறிஸ்தவ தேவாலயங்கள் ஒக்டோபர் 4இற்குக் கிட்டவாக வரும் ஞாயிற்றுக்கிழமையில் விலங்குகளுக்கு ஆசீர்வாதம் வழங்கும் சிறப்பு நிகழ்வுகளை நடத்தி வருகின்றன. ஆனாலும், இன்று கிறிஸ்தவர்களால் மட்டுமல்லாமல் உலகின் விலங்கு ஆர்வலர்கள் அனைவரினாலும் இந்நாள் கொண்டாடப்பட்டு வருகிறது. விலங்குகள் சரணாலயங்கள் இந்நாளில் பல நிதி சேகரிப்பு நிகழ்ச்சிகளை நடத்துகின்றன.

> **“உலகம் இயல்பான நிலையில் இருப்பதற்கு பல்லுயிர் பெருக்கம் மிகவும் அவசியம். வனங்களை அழித்து மனிதர்கள் மட்டும் வாழ்ந்தால் போதாது. பறவைகள்இ விலங்குகளும் அவசியம் என்பதை அனைவருமே உணர வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 4ம் திகதியை உலக விலங்குகள் தினமாக கொண்டாடப்படுகிறது. இத்தாலி நாட்டைச் சேர்ந்த பிரபல வன ஆர்வலர் பிரான்சிஸ் அசிசி உயிரிழந்த நாளையே உலக விலங்குகள் தினமாக கொண்டாடப்படுகிறது**

44 வருடங்களில் விலங்குகளின் எண்ணிக்கை 58 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளதாக ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. இதற்கு பிரதான காரணமாக மனித செயற்பாடுகள், சூழல் மாசு, காலநிலை மாற்றம் மற்றும் விலங்கு வியாபாரம் என உலக வனவிலங்கு நிதியம் கூறுகிறது. எதிர்காலத்தில் தற்போது நிலவும் விலங்குகளின் எண்ணிக்கையில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு அழிவடையக்கூடும் என உலக வனவிலங்கு நிதியம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தாலி நாட்டைச் சேர்ந்த பிரபல வன ஆர்வலர் பிரான்சிஸ் அசிசி உயிரிழந்த நாளையே உலக விலங்குகள் தினமாக கொண்டாடப்படுகிறது. 1931ஆம் ஆண்டு இத்தாலி நாட்டில் கடைபிடிக்கப்பட்ட இத்தினம் நாளடைவில் பிற நாடுகளிலும் கடைபிடிக்கப்பட்டது.



இந்த ஆண்டு உலக விலங்குகள் தினத்திற்கான கருப்பொருளாக 'Raising the status of animal to improve welfare standards around the globe' அதாவது, 'உலகளாவிய அளவில் விலங்குகளின் நலனைக் காக்க,அவற்றின் நிலையை உயர்த்துதல்' கருப்பொருளாக அமைகிறது.இந்த நிகழ்வை அறிமுகப்படுத்தியதன் நோக்கம் விலங்கு நலன் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதாகும். மேலும் விலங்குகள் நம் வாழ்க்கையை எவ்வாறு மேம்படுத்துகின்றன என்பதை நினைவூட்டும் நாளாகவும், விலங்குகளிடம் மிருகத்தனமாக நடந்து கொள்ளும் மனிதர்களுக்கு எதிராகவும் பல்வேறு சமூகங்கள் மற்றும் குழுக்களை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும்.

### விலங்குகள் எதற்காக பாதுகாக்க வேண்டும்?

QUESTION வனப்பகுதிகளில் விலங்குகள் வாழ்வதனால்தான் பூமியில் நாம் பாதுகாப்பாக வாழ முடிகிறது. வனப்பகுதி அழிக்கப்படும்போது விலங்குகள் நகருக்குள் பிரவேசிக்கின்றன. உலகில் உள்ள விலங்குகளின் எண்ணிக்கை தன்மையைப் பொறுத்தே ஒவ்வோர் இடத்தின் சூழலியல் மண்டலமும் இயங்குகிறது. வனவிலங்குகள் தொடர்பாக உலக அளவில் நடந்து வரும் சட்டவிரோத வர்த்தகமும், காடழிப்புக்களும் விலங்குகளின் அழிவுக்குக் காரணங்களாகும்.

நேரடியாகவும் மறைமுகமாகவும் விலங்குகள் அழிக்கப்பட்டு அன்றாட பொருட்கள்,மருந்து தயாரிப்புகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால்தான் பல உயிரினங்கள் அழிந்து வருவதோடு அரிய வகையாகவும் இருந்து வருகின்றன. உதாரணமாக எறும்புத் திண்ணி வெளிநாடுகளில் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் ஒரு இலட்சம் எறும்புத்தின்னிகள் காடுகளில் இருந்து பிடிக்கப்பட்டு வியட்நாமுக்கும் சீனாவுக்கும் கடத்தப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவை மட்டுமல்ல... யானை, புலி, சிங்கம் உள்ளிட்ட உயிரினங்களும் ஆண்டுதோறும் அதிகளவில் இறந்து வருகின்றன. தான்சானியாவில் 2009ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து ஒன்பதாயிரமாக இருந்த யானைகளின் எண்ணிக்கை 43 ஆயிரமாகச் சரிந்துள்ளது. இதில் தந்தங்களுக்காக அதிகளவில் கொல்லப்படுகின்றன.
தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் நடத்திய புலிகள் கணக்கெடுப்பின் படி, இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளன. தமிழகத்தைப் பொறுத்தவரை 264 புலிகள் உள்ளதாகவும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் மட்டும் 40 ஆயிரம் புலிகள் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், வேட்டை முதலிய பல காரணங்களாலும் தொடர்ந்து உலகெங்கும் புலிகளின் எண்ணிக்கை குறையத் தொடங்கியது. 1973ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் இந்திரா காந்தி புலிகள் பாதுகாப்பு திட்டத்தைத் தொடங்கினார். இத்திட்டத்தின்படி, புலிகள் காப்பகம் அமைத்து புலி வேட்டையினை தடுப்பது ஆகிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் பின்னர் இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை மெல்ல மெல்ல உயரத் தொடங்கியது.


வனப்பாதுகாவலர்கள் போல, செயல்படும் யானை, புலி, சிங்கம் உள்ளிட்ட உயிரினங்கள் அழிவது வனப்பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும். ஏற்கெனவே வனப்பகுதியில் அரிய வகை மரங்கள் வெட்டி கடத்தப்பட்டு வருகின்றன. விலங்குகளின் மறைவிடமாகவும், இருப்பிடமாகவும் உள்ள மரங்கள் வெட்டி கடத்தப்படுவது பாரிய குற்றச் செயலாகும். வனத்தில் மரங்கள் அழிப்பது மழை வளத்தை அழிப்பதற்குச் சமம்.

விலங்குகள் மீட்புக் கூடங்களுக்குப் பங்களிப்பு செய்தல், விலங்குகள் நலப் பிரசாரங்களை மேற்கொள்ளல் போன்ற பல நோக்கங்களுக்காக மக்கள் இத்தினத்தை நினைவு கூறுகின்றனர். இந்த சர்வதேச நிகழ்வு விலங்குகளின் நலனை உறுதி செய்வதையும், இயற்கையில் அவற்றின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

உலக விலங்குகள் தினம் முதன்முதலில் 1925 மார்ச் 24ஆம் திகதி அன்று ஜேர்மனியின் பெர்லினில் சினாலஜிஸ்ட் ஹென்ரிச் சிம்மர்மேனின் முயற்சியால் கொண்டாடப்பட்டது. 1931ஆம் ஆண்டு மே மாதம் இத்தாலியின் புளோரன்ஸ் நகரில் நடந்த சர்வதேச விலங்குகள் பாதுகாப்பு காங்கிரஸ் மாநாட்டில் அக்டோபர் 4ஆம் திகதி உலக விலங்குகள் தினமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 2003ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்தை மையமாகக் கொண்ட விலங்குகள் நல நேச்சர்வாட்ச் அறக்கட்டளை சர்வதேச விலங்குகள் தின கொண்டாட்டத்தை நடாத்தி வருகிறது. இந்த நாள் பொதுவாக அழிந்து வரும் நமது உயிரினங்களைப் பற்றி மக்களுக்குக் கற்பிப்பது மட்டுமல்லாமல் அவற்றை எவ்வாறு மீட்பது என்பதையும் கற்றுக்கொடுக்கிறது. உலக விலங்கு தினம் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று உலகளாவிய நிகழ்வாக மாறியுள்ளது.
இது விலங்கு பாதுகாப்பு இயக்கத்தை ஒன்றிணைத்து ஊக்குவிக்கிறது. விலங்குகள் மீட்புக் கூடங்களுக்கு பங்களிப்பு செய்தல், விலங்குகள் நலப் பிரச்சாரங்களைத் தொடங்குதல் மற்றும் விலங்குகளின் உரிமை பற்றிப் பேசுவதற்கும் வெளிப்படுத்தவும் மக்கள் இந்த நாளை நினைவு கூறுகின்றனர்.

பூமி மனிதர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல என்பதை மனதில் நிறுத்திச் செயற்பட வேண்டிய காலத்தின் கட்டாயத்தில் மானுடர்கள் உள்ளனர்.





# பழைமைவாதியும் பழந்தமிழும்





தருமலிங்கம் லுகிர்தா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

(புதன்கிழமை தொடர்ச்சி...)

அதனால்தான் மருந்தே உணவாகும் என்பர் நம் முன்னோர்.

விரதங்களின் மூலம் தமிழர்களின் அறிவியற் பார்வையை நோக்குகின்ற போது விரதங்களின் போது தலைக்குக் குளித்து, சுத்தமான உடை அணிவதன் மூலம் உடல் வெப்பம் தணிக்கப்படுகின்றது. நோய்க்கிருமிகள் தாக்கம் குறைக்கப்படுகின்றது. உடலும் உள்ளமும் தூய்மையடைகின்றது.

பிதிர்க்கடன் செய்வது தமிழ் பாரம்பரியங்களில் ஒன்று. இது இறந்தவரின் உறவினரின் மனங்களை ஆற்றுப்படுத்துவதாகவே மேற்கொள்ளப்படுகின்றது இறந்தவர் சொர்க்கத்திற்குச் செல்வர் என சுற்றத்தவரின் மனக்கவலை களையப்படுகின்றது என்பது உளவியல் விஞ்ஞானம்.

தமிழ் மக்கள் எந்தக் காரியமாக இருந்தாலும் தோரணம், மாவிலை, வாழைமரம் கட்டுவது மரபு. அத்துடன் வேப்பிலை ஆலயங்களிலும் வீடுகளிலும் கட்டப்படுகின்றது. ஒரு வைபவம் எனில் மக்கள் செறிவு அதிகமாக இருக்கும். இவர்கள் ஒட்சிசனை உள்ளெடுத்து காபனீரொட்சைட்டை வெளிவிடுவார்கள். இப் பச்சை இலைகள் மற்றும் மரங்களால் காபனீரொட்சைட் உள்ளெடுக்கப்பட்டு ஒட்சிசன் வெளியிடப்படுகின்றது. இதனால் சூழல் சமநிலை மாறாது. மயக்கம் ஏற்படாது. அத்துடன், மஞ்சள் கரைத்துத் தெளிக்கப்படும். இதனால் கிருமித் தொற்றுக்கள் நோய்த் தொற்றுக்கள் ஏற்படும் அபாயம் குறைக்கப்படும்.

பண்டிகைக் காலங்களில் மருத்துநீர் வைத்து நீராடுவதானது நோய்க்கிருமிகளிடமிருந்து விடுபடுவதுடன் உடலின் வெப்பத்தைக் குறைக்கின்றது. பெண்கள் பருவமடைந்த போது தண்ணீர் வார்ப்பது என்ற வைபவம் நடைபெறும். இது அவ்வேளையில், உடல் வெப்பம் அதிகமாக உள்ளதால் உடல்ச் சூட்டினைத் தணிக்கவே இம்முறை கடைப்பிடிக்கப்படுகின்றது.

சைவ மரபில் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் செய்வது மரபு. இது அதிகாலையில், மாலையில் செய்யப்படுகின்ற போது, முள்ளந்தண்டு நேராக இருப்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. அன்பே சிவமாகும் என்பது இந்துக்கள் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய ஒன்று. இறைவனை அடைதல் என்ற முத்திநெறிக்குச் செல்வதற்குரிய மார்க்கமாக உயிர்களிடம் அன்பாயிருத்தல் என்பதும் வலியுறுத்தப்படுகின்றது. பஞ்சமாபாதங்கள் தவிர்க்கப்பட வேண்டியவை இவ்வாறு தவிர்ப்பதினூடாக மொழி, மத, சாதி பேதார்களில அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்கின்ற தத்துவத்தினைக் கூறி நிற்கின்றது. இந்துமதம் மட்டுமன்றி ஏனைய சமயங்களிலும் இதனைத்தான் வலியுறுத்துகின்றன. அவை அனைத்து மனிதர்களால் கடைப்பிடிக்கப்படுகின்றதா? என்று கேட்குமிடத்து அந்தக் காலம் மலையேறிய போச்சு என்ற கருத்தாகவே உள்ளது.

மனிதனை மனிதனாக இவ் வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதற்காகவே இதை இவ்வாறு செய்யவேண்டும். இவை தவிர்க்கப்பட வேண்டும் என்ற அரிய செய்யினை எம் முன்னோர்கள் அன்றே வகுத்து வைத்துள்ளனர். அதனை மாற்ற முற்படுகின்ற பொழுதே தீய சம்பவங்கள் சூழ்ந்து கொள்கின்றன. ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும். கருத்துக்கள் பழைமை என்பதனை விடுத்துப் பொதிந்துள்ள கருத்துக்களை நோக்கி ஆழ்ந்து சென்று மனிதன் மனிதனாக வாழ வேண்டும். ஒருபோதும் ஒரு தாய் பிள்ளைகள் கெட்டுப் போக வேண்டும் என நினைக்கமாட்டாள். அது போலவே எமது முன்னோர்களும் எமக்கு அரிய பல செயல்களினை விட்டுச் சென்றுள்ளனர். எமது பண்பாடு அறிவியலை அறிவியற் கருத்துக்களால் ஆளுகின்றது.

இன்றைய விஞ்ஞானம் அன்றைய எமது முன்னோரின் மெஞ்ஞானத்தின் சாரளம்.



# முகநூல் சாரதா





சாந்திஜொ

“அம்மா சாரதா ஒருமுற என்னைய வந்து பார்த்துட்டு போ மா”னு தொலைபேசியில் தேம்பி அழுது நலம் விசாரித்த குரல் இன்னும் என் காதில் ஒலித்து கொண்டே இருக்கிறது. மகள் ஜேர்மனியில் செட்டில் ஆகி, தனக்கு பார்க்க முடியாமல் இருக்கிறதே என்பது மட்டும் அம்மா அழுததற்கு காரணமல்ல.

என் 2ஆவது வருட கல்யாண நாள் அன்று தான் எனது தந்தை ராஜராமன் அவர்களின் இறந்த நாள். அவர் உயிருடன் இல்லை என்றாலும், இன்றும் எங்கள் ஊரிலுள்ள ஒவ்வொரு வீட்டாரின் மனதிலும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்.

காரணம் வல்லிபுரம் எனும் எங்களது ஊரில் ஒவ்வொரு தெருக்களிலும் அவர் நூலகம் அமைத்ததும் அனைவரையும் புத்தகங்கள் வாசிக்க ஊக்குவித்ததுமே. நல்ல புத்தகங்கள் வாசிப்பதினால் மட்டுமே சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதில் உறுதியாக இருந்தார்.

அதற்காக ஒவ்வொரு தெருக்களிலும், நூலகம் வேண்டும் என்ற முயற்சியில் வெற்றியும் பெற்றார். பண்டிகை காலங்களில் இளைஞர்களுக்கு காந்தி, நேதாஜி, அப்துல் கலாம், டால்ஸ்டாய் புத்தகங்களையும், வரலாற்று நூல்களையும் வாங்கி கொடுப்பார்.

ஆரம்பத்தில் புத்தகங்கள் வாசிப்பதில் எனக்கு இருந்த மோகம் கொஞ்சம் கொஞ்சமாக அதை விட்டு செல்போன் மீது சென்றது. அதுவும் சோசியல் மீடியா பக்கம். அதனால் எனது தந்தையின் அறிவுரையும் எனது புத்திக்கு ஏறவில்லை. முகநூலிலே எனது நேரத்தை உலாதினேன். காரணம் ரோய்.

ஜேர்மன் நாட்டை சேர்ந்தவர். முகநூலில் அறிமுகமாகி மெசேஜ் மூலம் பேசிக்கொண்ட நாங்கள் காதல் ஏற்பட்டு திருமணம் வரை வந்து விட்டோம்.

எனது காதல் விஷயம் அறிந்ததும் என் தந்தை சொன்ன வார்த்தைகள் இன்னும் என் மனதில் இருக்கிறது. “நீ இப்போது எடுக்கும் முடிவே, உனது பிற்கால எந்த நிலைமைக்கும் காரணமாக அமையலாம். அந்த முடிவுக்கு முன், உன் பழக்க வழக்கங்களும் சிந்தனைகளும் எப்படி இருந்ததோ அதன்படியே உன் முடிவு சரியா தவறா என்று தீர்மானிக்கப்படும் என்றார்.

இதெல்லாம் நடந்து 4 வருடங்கள் ஆனாலும், எனது தந்தை சொன்ன வார்த்தைகளை மறக்க முடியவில்லை. செல்போனிலே உலாவியதால் எனக்கு கிடைத்த அந்த பரிசு தான் ஏமாற்றம். நான் நினைத்தபடியே எல்லாம் வசதிகளும் எனது கணவருக்கு இருந்தாலும், அவருக்கு நான் 3ஆவது மனைவி என்பதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

எற்கெனவே 2 முறை திருமணமான அவர், என்னையும் முகநூலில் ஏமாற்றி திருமணம் செய்து கொண்ட விவகாரம் ஜேர்மனுக்கு வந்த பிறகு, தான் தெரிய வந்தது. அத்துடன், போதைப்பொருளுக்கு அடிமையானவர்.

தற்கொலைக்கு முயற்சி செய்த நான், அறிவுக்கு மட்டும் அல்ல, சோகம் கவலை, ஏமாற்றம் எல்லாவற்றிற்கும் ஒரே மருந்து புத்தகங்களே எனும் என் தந்தையின் கொள்கையை நினைத்து அந்த எண்ணத்தை கைவிட்டேன்.

செல்போனில் சோசியல் மீடியாவின் அளவான பயன்பாடு குறித்தும், புத்தகம் வாசிப்பின் நலனை குறித்தும் மக்களுக்கு ஊக்குவிப்பதையும் இலட்சியமாக கொண்டு செயல்படும் நான் இன்னும் நல்ல புத்தகங்களையும், வரலாற்று நூல்களையும் வாசிக்குமாறும், முக்கியமாக இனி உங்கள் தலைமுறைகளுக்கு வாசிக்க ஊக்குவிக்குமாறும் பாதிக்கப்பட்ட முகநூல் சாரதாவாக பரிந்துரைக்கிறேன். இக்கதை சாரதா போல வாழ்பவர்களுக்கு அல்ல. முகநூல் சாரதா போல வாழ போகிறவர்களுக்கானது.

# முயற்சித்துபார்





கணேஸ்குமார் மதியந்தி
ஊடகக் கற்கைகள் துறை
யாழ். பல்கலைகழகம்

மாற்றங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் எம் தலைமுறையினரில் பலர் சுயதொழில் முயற்சியாளர்களாகச் சாதித்து வருகின்றதைக் காணமுடிகின்றது. ஓவியர்களாகக் கைவினை கலைஞர்களாக அலங்கார பொருட்களைத் தயார் செய்பவர்களாக என பல்வேறு விதத்தில் முன்னேறி வருகின்றனர். கண்களையும் காணுதலையும் அடிப்படையாக கொண்டதே காண்பியல் கலை. இவை பார்வையாளர்களை இரசனையாளர்களாக மாற்றி அவர்களின் மனதில் ஆழ்ந்து வேரூன்றி நிற்கவல்லது. அதன் அடிப்படையில் இன்று அலங்கார பொருட்களுக்கு தனி இடமுண்டு என்பதனை தனது திறமையினாலும் முயற்சியினாலும் எம்முடைய சந்ததியினருக்கு மெய்ப்பித்தவர்களுள் ஒருவராக முன்னாள் போராளியாக இருந்த டி.சுரேஷ்குமார் இடம் பிடிக்கின்றார்.

யாழ்ப்பாணத்தில் வசிக்கக்கூடிய இவர் தன்னுடைய வாழ்க்கையில் போராளியாக இருந்த காலத்தில் தன்னுடைய வாழ்க்கையினை சரியான பாதையின் வழியே நகர்த்திச் செல்வதற்கு உதவியது இந்த தொழில். தனி நபராக இருந்து அதுவும் நாம் பயன்படுத்தி வீசுகின்ற கழிவுப் பொருட்களைக் கொண்டு பல உருவங்களைத் தயாரித்து அப்பொருட்களை உயிர்ப்பித்து வந்த இத்தொழில் இன்று 35 தொழிலாளர்களை வைத்து *Craftary* என்ற நிறுவனத்தையே வழிநடத்திக் கொண்டிருப்பது பெருமைக்குரியதே.


ஒரு நல்ல பொருளை எடுத்து, இன்னொரு நல்ல பொருளை உருவாக்குவதிலும் பார்க்க, யாருக்கும் உதவாத கழிவுப் பொருட்களை வைத்து அவற்றிற்கு உருவம் கொடுத்து உச்சபட்ச பயனை அடைதல் என்பது சிறப்பானவையே என்பதனை நிரூபித்து வந்த பி.சுரேஷ்குமார் என்பவரோடு கலந்துரையாடியபோது, அவர் பின்வருமாறு குறிப்பிட்டார். “என்னுடைய இளம் பருவமானது பல வலிகளையும் வடுக்களையும் கடந்தது. நான் போராளியாக இருந்த காலத்தில் ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தினை எவ்வாறு தனக்கு ஏற்ற வகையில் வடிவமைத்துக்கொள்ள வேண்டும் என்பதனை எனக்கு கற்றுத் தந்துள்ளது. வாழ்க்கையில் அடுத்து நான் என்ன செய்யப் போகின்றேன் என்று திக்கு திணறியபோது, கைகொடுத்த தொழில் தான் இது. இன்று வரையும் என்னையும் என்னைச் சார்ந்தவரையும் காப்பாற்றி வருகின்றது. தனி ஒருவனாக இருந்து இத்தொழிலை ஆரம்பித்து, சுமார் 3 வருடங்களாக நான் அனுபவித்த சவால்கள், தடைகள் எல்லாம் இன்று சுமார் ஏழு ஆண்டுகளாக ஒரு நிறுவனத்தையே வழிநடத்தி வருகின்றதுக்கு எனக்கு கிடைத்த பயிற்சி என்றே கருதுகின்றேன். எங்களது நிறுவனத்தினை பொறுத்தவரையில், வாடிக்கையாளர் என்ன வடிவத்தில், எந்த அளவில், என்ன விலையில் எதை கேட்டாலும் நாங்கள் அதனைச் செய்து கொடுப்போம் என்னுடைய பிரதான நோக்கமே நான் விரும்பியதை செய்து வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்துவதை விட வாடிக்கையாளர் எதை விரும்பி கேட்கின்றார்களோ அதனை கேட்ட விதத்தில் பொருத்தமான கழிவுப் பொருட்களை வைத்துச் செய்து திருப்திப் படுத்துவது தான்.

இலங்கையிலேயே அலங்கார பொருட்களுக்குப் பெயர் பெற்ற ஒரு நிறுவனமாக *Craftary* இந்த விளங்கிவருகின்றது. எங்களுடைய கிளையானது மட்டக்களப்பில் காணப்படுகின்றது. பெரும்பாலும் நாங்கள் பொருட்களைச் செய்து உள்ளூரிலும் பார்க்க ஐரோப்பிய நாடுகளான கனடா, சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளில் ஏற்றுமதி செய்வதுதான் அதிகம். எங்களுக்கு கனடாவில் ஒரு *Storeroom* உள்ளது. ஆகவே எங்களுக்கு இதன் மூலம் அதிகளவு இலாபத்தினை பெறக்கூடியதாக உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

மேலும், கண்களைக் கவரக்கூடிய வகையில் கழிவுப் பொருட்களை வைத்து தயார் செய்கின்ற இந்த அலங்கார பொருட்களை செய்வதற்காகப் பயன்படுத்துகின்ற கழிவுப் பொருட்கள் தொடர்பாகவும் பொருட்களைப் பெறுகின்ற முறைமை தொடர்பாகவும் அவரிடம் கேட்ட பொழுது, “நாங்கள் பெரும்பாலும் பயன்படுத்தி வீசப்படுகின்ற கழிவுப் பொருட்கள் ஏதுவாக இருந்தாலும் அதன் ஊடாக பொருட்களைத் தயாரிப்பதோடு மர வகைகளில் பாலை, தேக்கு, மூது ஆகிய மரங்களையும் பயன்படுத்தி வருகின்றோம். எங்களைப் பொறுத்தவரையில், பெரும்பாலும் இவ்வாறான அலங்கார பொருட்களைச் செய்வதற்கான மூலப் பொருட்களை உள்ளூரிலிருந்து பெறுகின்றோம். ஏனென்றால், அதன் ஊடாக நான் பட்ட கஷ்டத்தினை போன்று கஷ்டப்படுகின்ற பலரது வாழ்க்கைக்கு ஏதோ வகையில்,
உதவ முடியும் என்பதே என்னுடைய நோக்கம். நாங்கள் பெரும்பாலும் பலாலி (*NavyCampus*), யாழ்ப்பாண வைத்தியசாலை போன்ற இடங்களிலும் எங்களை அண்டியுள்ள பிரதேசங்களில் சிரட்டைகள் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்களை பெற்றுக் கொள்வோம். பெரும்பாலும் நாங்கள் சிரட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக அவர்களிடம் இருந்து முழுமையாகத் தேங்காயினைப்பெற்று எங்களுக்குத் தேவையான வடிவத்தில் அதனை வெட்டிய பிறகு அவர்களிடம் கொடுத்து தேங்காய் துருவி விட்டதன் பின்னர் கிடைக்கின்ற சிரட்டையைப் பெற்றுக் கொள்வோம். உதாரணமாக நாங்கள் ஒரு தேங்காயை 70 ரூபாய்க்கு அவர்களிடம் வாங்கினால் அதனை எங்களுக்குத் தேவையான வடிவத்தில் வெட்டிவிட்டு அவர்களிடம் மீண்டும் வழங்கி அவர்கள் தங்களுக்கான தேங்காயை துருவிய பின்னர், வீசுகின்ற சிரட்டையினை நாங்கள் 40 ரூபாய் கொடுத்து வாங்குவோம். இப்போது அவர்களுக்கான தேங்காய் விலை 30 ரூபாய் மாத்திரமே. இவ்வாறு எங்களை அண்டியுள்ளவர்களையும் வாழ வைப்பதே எங்களுடைய பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது. இவ்வாறு தேங்காயினுடைய அளவை பொறுத்து, 50 ரூபாய் 100 ரூபாய் 200 ரூபாய் 250 ரூபாய் வரைக்கும் நாங்கள் விலை கொடுத்து வாங்குகின்றோம். அதுமட்டுமல்லாமல் எங்களுடைய விற்பனை எனும் போது நீண்ட காலம் பாவிக்கக்கூடிய பொருட்கள், குறுகிய காலம் பாவிக்கக் கூடிய பொருட்கள் என பொருட்களை வேறுபடுத்தி அறிவதோடு, வாடிக்கையாளர் செய்யச் சொல்லுகின்ற பொருட்களினுடைய தரத்தினை பொருத்து விலையானது தீர்மானிக்கப்படுகின்றது எனவும் குறிப்பிட்டார்.

எமது நாட்டினுடைய விசேடமாக விளங்கக்கூடிய இவ்வாறான அலங்கார பொருட்களை உள்ளூரில் விற்பனை செய்வதிலும் பார்க்க வெளிநாடுகளில் ஏற்றுமதி செய்வதற்கான காரணம் தொடர்பாக வினவிய பொழுது “எமது நாட்டினை பொறுத்தவரையில் வெளிநாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்த அலங்கார பொருட்கள் மீதான ஆர்வமோ, ஈடுபாடோ குறைவாகவே உள்ளது. அதுமட்டுமல்லாமல், இங்கு ஒரு பொருளை விற்பனை செய்யும் விலையிலும் பார்க்க அங்கு இருமடங்கு இலாபத்தினை பெறக் கூடியதாக உள்ளதோடு நாங்கள் ஓரிரு பொருட்களை விற்பனை செய்வதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட அளவு பொருட்களை ஏற்றுமதி செய்கின்றோம். இதனூடாக எங்களுக்கு ஓரளவு இலாபத்தினை பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது எனவும் குறிப்பிட்டார்.





மேலும், தாங்கள் வாடிக்கையாளரைத் தொடர்பு கொள்வதற்கு கையாளும் வழிமுறைகள் தொடர்பாகக் கேட்ட பொழுது, “நாங்கள் பெரும்பாலும் சமூக ஊடகங்களான *Facebook, Insdragram, Youtube* போன்ற தளங்களில் ஊடாக எங்களுடைய அலங்கார பொருட்கள் தொடர்பான விளம்பரத்தினை வழங்குவதோடு, வாடிக்கையாளர்களினுடைய தேவையினையும் தெரிந்து கொண்டு அதனைப் பூர்த்தி செய்வதற்கு முயற்சித்து வருகின்றோம். அதுமட்டுமல்லாமல், பல்கலைக்கழகங்களில் கலைத்துறையில் *Art Designing* துறையில் பயின்று வருகின்ற பட்டதாரிகளும் தங்களுடைய இன்டர்ன்ஷிப்பின் போது 90 மணித்தியாலத்தினை எங்களுடைய நிறுவனத்தில் கழிக்கின்றனர். அவர்களுக்கும் எங்களுடைய கலை சார்ந்த அனுபவத்தினை கற்றுக் கொடுப்பதன் ஊடாக எங்களுடைய கலையானது சமூக மயமாக்கல் அடைகின்றது என நம்புகின்றேன்” என்றார்.



மேலும், இக்கலைத்துறையின் மீதான ஈடுபாடு தொடர்பாக அவரிடம் கேட்ட பொழுது “என்னைப் பொறுத்தவரையில் நான் பாதையில் ஒரு சிரட்டையோ வேரையோ கண்டால் எனக்கு அது கழிவுப்பொருளாக இருந்தாலும் என்னைப் பொறுத்தவரையில், அதனை எவ்வாறு வடிவமைக்கலாம் என்ன உருவத்தினை செய்யலாம் என்பதே எனது சிந்தனையில் ஓடிக்கொண்டிருக்கும். அந்த அளவுக்கு இந்த அலங்கார தொழிலானது என்னுடைய வாழ்வோடு பின்னி பிணைந்ததாகக் காணப்படுகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.


உண்மையில் இவருடைய கருத்துக்களை அவதானித்த வரையில் ஒரு போராளியாக இருந்து வாழ்க்கையின் பல அடிகளைத் தாண்டி முயற்சியால் சாதனை படைத்து இன்று ஒரு நிறுவனத்தையே வழிநடத்தி வருகின்ற இவர்களைப் போன்றவர்களைப் பாராட்ட வேண்டியது மிகவும் முக்கியமானதே. ஆகவே, வாழ்வினை பொறுத்தவரையில் முயற்சி செய்தால் நிச்சியம் பயன் அடையலாம் என்பதற்கு இவர் ஒரு சிறந்த முன்னுதாரணமே.

வாழ்வில் துயரத்தினை நீக்க
உன்னுடைய முயற்சியே போதும்
நண்பா இனி உன் வாழ்க்கை
உன் கையில்...



### சிங்கள–தமிழ் உறவின் பல்வேறு அம்சங்களை எடுத்துரைக்கும்

# ‘வட பிராந்தியத்தில் ஆரிய நாகரிகம்’




இலங்கையின் வரலாற்றின் மேலும் ஒரு அம்சத்தை பற்றிய தகவல்களைத் தரும் நூலாக, ‘வட பிராந்தியத்தில் ஆரிய நாகரிகம்’ (லக்திவ உத்துருகரையே ஆர்ய சப்யத்வய) என்ற நூல் வெளியாகியுள்ளதுடன், இதன் மூலம் சிங்கள-தமிழ் உறவின் பல்வேறு அம்சங்களை எடுத்துரைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நூலின் ஆசிரியர்களின் முக்கிய நோக்கம், நாட்டின் வடக்குப் பகுதியில் குடியேற்ற விரிவாக்கத்தின் தன்மையின் முதன்மை ஆதாரம் மற்றும் இரண்டாம் ஆதாரம் தொடர்பாகக் காணப்படும் உண்மைகளை வரலாற்று ரீதியாகப் பகுப்பாய்வு செய்வதாகும்.

அங்கு, கடந்த காலத்திலிருந்து

அனுராதபுர சகாப்தத்தின் இறுதி வரை, பொலன்னறுவை காலம் முதல் 1948 வரையான இலங்கையின் வடக்குப் பகுதியின் சுருக்கமான வரலாறு, புத்தகத்தின் ஆசிரியர்களால் கவனத்தில் கொள்ளப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இங்கு முதலாம் அத்தியாயத்தில் வட பிராந்தியத்தில் காணப்படும் புவியியல் அம்சங்கள் கலந்துரையாடப்பட்டு இலங்கையின் வரலாற்றுப் போக்கின் அபிவிருத்தி தொடர்பான அலசல் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், வடக்கின் வரலாற்றை ஆய்வு செய்ய உதவும் மூலத்தின் மீதும் இந்நூலாசிரியர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தியுள்ளதால், வரலாற்றுத் துறையில் காணப்படும் ஒரு முக்கிய ஆய்வு நூலாக இதனைக் குறிப்பிடலாம்.

இந்நூலில் தீபவன்சம், மகாவம்சம், சிஹலவத்துப்பகரன, புஜவலியல, ராஜாவலிய மற்றும் யாழ்ப்பாண வைபவமாலை போன்ற இலக்கிய மூலங்கள் ஊடாகவும் வெளிநாட்டு இலக்கிய மூலங்கள் ஊடாகவும் வெளிப்பட்ட உண்மைகள் தொடர்பிலும் தகவல்கள் அலசப்பட்டுள்ளன.

தொல்லியல் மூலத்தின் கீழ், எஞ்சியிருக்கும் கல்வெட்டு அல்லது நாணயங்களின் மூலம் வடக்கு பிராந்தியத்தின் வரலாற்றை ஆராய முடியும் என்றும், வடக்கின் வரலாற்றை ஆய்வு செய்யக் கூடிய தொல்லியல் ஆதாரங்களில் கல்வெட்டுகளுக்கு முக்கிய இடம்முண்டு என்று இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், பிராமணர் காலத்துக்கு முந்தைய கல்வெட்டுகளையும், பிந்தைய பிராமணக் கல்வெட்டுகள் பற்றியும் இந்த நூலில் பேசப்பட்டுள்ளது.

“மூன்றாம் நூற்றாண்டிலிருந்து தொடங்கும் குகைக் கல்வெட்டுகளிலிருந்து வடக்கின் வரலாற்றை ஆராயலாம் என்றும், வடக்கு குடியேற்றம் பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தி, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இப்பகுதி மக்கள் வசிப்பிடமாக இருந்ததற்கான சான்றுகள் முன்வைக்கப்பட்டு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இங்கு குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்படுவதாகவும், அதன் பிறகு, வரலாற்றின் போக்கு படிப்படியாக இந்த பகுதியில் உருவாகிறது என்றும் இந்த நூலில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது” என பேராதனை பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை பேராசிரியர் என்.ஏ.விமலசேன தெரிவிக்கின்றார்.

பொலன்னறுவைக் காலத்திலிருந்து வட பிராந்தியத்தின் வரலாற்றைப் பற்றி ஆராயும்போது, பொலன்னறுவை யுகத்தில் தம்பதெனிய காலத்தில் ஆரிய சக்ரவர்த்தியின் தோற்றம் மற்றும் யாழ்ப்பாணத்திற்கும் கோட்டை இராச்சியத்திற்கும் இடையிலான உறவுகள் மற்றும் மலைநாட்டு இராச்சியத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான உறவுகள் இந்த புத்தகத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

இந்த அத்தியாயத்தின் மூலம் சிங்கள-தமிழ் உறவின் பல்வேறு அம்சங்களை எடுத்துரைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வட ஆரிய சாம்ராஜ்யத்தின் ஆட்சியாளர்களை ஆராய்ந்த பின்னர், அங்கு வாழ்ந்த மக்களையும் இந்நூல் மூலம் ஆராய்ந்துள்ளனர்.

குறிப்பாக சிங்கள, தமிழ்ச் சமூகங்கள் தொடர்பான உண்மைகள் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளன. இங்கு சேனாலங்காதிகார மற்றும் அழகேஸ்வரா ஆகிய உயர் குடும்பங்களைப் பற்றிய உண்மைகளை இப்படைப்பின் மூலம் அலசுவது முக்கியமானது.

இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் பேராசிரியர் அமரதாச லியனகமகேவின் படைப்பு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள உரையும் மிக முக்கியமானது என்றும் பேராசிரியர் என்.ஏ.விமலசேன குறிப்பிடுகின்றார்.

வடக்கில் இருந்து ஆரிய சக்ரவர்த்தியின் படையெடுப்பை எதிர்கொண்டு சிங்கள மன்னர்கள் ஆதரவற்ற நிலையில் இருந்த நேரத்தில், அழகேஸ்வரா அல்லது அழகக்கோனார் என்ற பரம்பரையைச் சேர்ந்த பிரபல தலைவர்கள் அரசியல் துறையில் வலுவாக எழுந்தனர். அவர்கள் யாழ்ப்பாண மன்னர்களின் படையெடுப்பை எதிர்த்துப் போராடி சிங்கள அரசைக் காப்பதில் முன்னணி வகித்தமை உள்ளிட்ட விடயங்கள் அலசப்பட்டுள்ளதுடன், மேற்கத்திய ஆதிக்கத்தின் கீழ் இருந்த கண்டி மற்றும் வடக்கின் அரசியல் வரலாறு இந்த நூலில் விரிவாக அலசப்பட்டுள்ளது.

பொதுவாகப் பார்த்தால், இந்த நூலின் மூலம் வடக்கு பகுதியை பற்றிய மிக முக்கியமான பல தகவல்களை வாசகர்கள் பெறலாம், இந்நூலின் தொகுப்பாளர்கள் ஒரு நாட்டின் பிராந்திய வரலாற்றை பற்றிய தகவல்களை வழங்குவதில் அதன் புவியியல் இருப்பிடத்திலிருந்து மற்ற அம்சங்களை கவனித்திருப்பது முக்கியம். குறிப்பாக, அத்தியாயத்தில் முன்வைக்கப்பட்ட தகவல் தொடர்பான உண்மைகளை கோடிட்டுக் காட்டுவதன் மூலம் வடக்கு பிராந்தியத்தின் வரலாற்றை ஆய்வு செய்ய ஆதாரம் முயற்சித்துள்ளது.


எனவே, இந்நூலின் ஊடாக இலங்கையின் வட பிராந்திய அரசியல் நிலவரங்கள், கலாசார, இன நிலைமைகள், சமூக நிலைமைகள் தொடர்பாக மிகவும் பெறுமதியான பல உண்மைகளை அலசும் படைப்பாக இதனைப் பாராட்டலாம் என, பேராதனை பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை பேராசிரியர் என்.ஏ.விமலசேன குறிப்பிடுகின்றார்.



# நவராத்திரி விரதம் இன்று ஆரம்பம்



வி.ரி.சகாதேவராஜா



நவராத்திரி பண்டிகை புரட்டாசி அமாவாசை முடிந்து பிரதமை தொடங்கி தசமி வரை கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. மாசி மாதத்தில் சிவனுக்குச் சிவராத்திரி கொண்டாடுவது போல, புரட்டாசியில் ஒன்பது நாட்கள் சக்தியை வழிபட நவராத்திரி பண்டிகை கொண்டாடுகிறோம்.

இந்த ஆண்டு ஐப்பசி மாதம் முதல்நாள் ஒக்டோபர் 03ஆம் திகதி இன்று வியாழக்கிழமை நவராத்திரி தொடங்குகிறது. ஒன்பது நாட்கள் அனுஷ்டித்து பத்தாம் நாள் 12 ஆம் திகதியன்று விஜயதசமியுடன் நிறைவடையும்.

பிரதமை தொடங்கி தசமி வரை ஒன்பது இரவுகள் அம்பிகையை அலங்கரித்துச் சிறப்பாக வணங்குவதன் மூலம் செல்வ வளம் பெருகும் என்பது ஐதீகம்.

உலகத்தின் இயக்கத்திற்கு எல்லாம் சக்தி தான் ஆதாரம். அந்த சக்தியை வழிபடுவதே நவராத்திரி திருவிழா. அம்மனை வழிபட்டால் அனைத்து ஆற்றலையும் பெறலாம். சக்தி இல்லை என்றால் இந்த உலகம் இயங்காது. அந்த சக்தியை வழிபடுவதற்காக உருவானதுதான் நவராத்திரி பண்டிகை. நவராத்திரி பண்டிகையின் ஒன்பது நாட்களும் ஒன்பது வகையான அலங்காரம் செய்து வழிபடுவது வழக்கம். ஒவ்வொரு அம்மன் ஆலயத்திலும் அம்மனுக்குத் தினசரி ஒவ்வொரு வடிவத்தில் அலங்காரம் செய்யப்பட்டுக் கொண்டாடப்படுகிறது.

அம்மனை சக்தி வடிவமாக இச்சா, கிரியா, ஞான சக்தி என மூன்று சக்திகளாக வழிபடுகின்றோம். வாழ்க்கையில் கல்வி, செல்வம் வீரம் ஆகிய மூன்றும் முக்கியம். மூன்றும் கலைமகள், அலைமகள், மலைமகள் என மூன்று சக்திகளை வழிபடுகின்றோம். வாழ்க்கையில் மூன்றும் முக்கியம். வீரத்திற்கு மூன்று நாட்கள், செல்வத்திற்கு மூன்று நாட்கள், கல்விக்கு மூன்று நாட்கள் ஒதுக்கி ஒன்பது நாட்கள் வழிபடுகின்றோம். இதன் மூலம் நமக்குச் சக்தி கிடைக்கும் அந்த சக்தியை நாம் நல்ல விசயத்திற்காகப் பயன்படுத்த வேண்டும்.

பிரதமை நவராத்திரியின் முதல் நாளில் தேவியான மகேஸ்வரி பாலா, மது கைடபர் அழிவுக்குக் காரணமான தேவி. இன்றைய தினம் மல்லிகை, வில்வம் கொண்டு அலங்கரிக்கவேண்டும். வெண் பொங்கல் நைவேத்தியம் செய்யலாம்.

துவிதியை இரண்டாம் நாள் தேவி கவுமாரி தேவியாகப் போற்றப்படுகிறாள். அவளே ராஜ ராஜேஸ்வரியாகவும் ஆராதிக்கப்படுகிறாள். முல்லை, துளசியால் அலங்காரம் செய்து புளியோதரை நிவேதனம் பண்ண வேண்டும்.

திரிதியை மூன்றாவது நாளுக்கு உரிய வாராகி அன்னை, கன்யா கல்யாணி என்று அழைக்கப்படுகிறாள். செண்பகம் மற்றும் சம்பங்கிகள் இவளுக்கு உகந்தவை. சர்க்கரைப் பொங்கல் படைத்து வழிபட வேண்டும்.

சதுர்த்தி நான்காம் நாளில் அருள்பவள் மகாலட்சுமி. இவள் ரோகிணி என்று அழைக்கப்படுகிறாள். மல்லிகைப் பூக்களால் அலங்காரம் செய்து, அன்னம் நைவேத்தியம் செய்து வழிபட வேண்டும்.

பஞ்சமி ஐந்தாம் நாளில் அன்னையை வைஷ்ணவியாகவும் மோகினியாகவும் அலங்கரிப்பர். முல்லைப்பூ அலங்காரமும் தயிர்ச் சாதமும் இவளுக்கு ஏற்றவை.

சஷ்டி ஆறாவது நாளுக்குரிய தேவி வடிவம் இந்திராணி. சர்ப ராஜ ஆசனத்தில் தேவி அமர்ந்திருக்கும் கோலத்தில் பூஜை செய்வது வழக்கம். தேவிக்கு ஜாதி மலரே உகந்தது. தேங்காய் சாதம் படைத்து வணங்கலாம்.

சப்தமி ஏழாம் நாளில் தேவி மகாசரஸ்வதி, சுமங்கலி என அழைக்கப்படுகிறாள். இந்த அன்னைக்குத் தாழம்பூ சூடி, தும்பை இலைகளால் அர்ச்சனை செய்ய வேண்டும். எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்து வழிபடலாம்.

அஷ்டமி எட்டாவது நாளில் தேவியானவள் நரசிம்மிதருமி. நரசிம்மி வடிவின் சினம் தணிந்த கோலம் இது. இந்த நாளில் அன்னை அன்பே உருவாக அருள்பாலிக்கிறாள். இவளுக்கு உகந்த ரோஜா மலரைச் சூடி, சர்க்கரைப் பொங்கல் படையல் இட்டு வழிபடலாம்.

நவமி ஒன்பதாம் நாளில் அம்பிகை, சாமுண்டி மாதா, அம்பு, அங்குசம் தரித்த லலிதா பரமேஸ்வரியாக அன்னையை வழிபடுவது வழக்கம். இன்றைய தினம் பால் பாயாசம் நைவேத்தியம் செய்து வழிபடலாம். தாமரை மலர்களால் அலங்கரித்து

விஜயதசமி பத்தாவது நாள் விஜய தசமி. விஜயம் என்றாலே வெற்றி! தீயவை அழிந்து நன்மை பெருகும். நாம் தொடங்கும் காரியம் வெற்றி பெறும் என்பதற்காகவே விஜயதசமி கொண்டாடப்படுகிறது. நவராத்திரியின்போது துர்கா, லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரையும் பூஜிப்பவர்களுக்கு எதிலும் நலம்பெறும் வகையில் வெற்றி கிடைக்கும்.

விரத பலன் நவராத்திரி விழாவின் ஒவ்வொரு நாளும் சிறப்பு என்றாலும் அதில் விசேஷமான நாட்கள் கடைசி மூன்று நாட்கள். சக்தியற்றவர்களாக இருப்போர் நவராத்திரி விரதத்தில் பூஜை செய்வதற்கு மிகவும் முக்கியமான நாட்கள் சப்தமி, அஷ்டமி, நவமி தினங்களாகும். இந்த மூன்று நாட்களும் விரதத்தோடு பூஜித்தால் ஒன்பது நாட்கள் பூஜித்த பலன் கிடைக்கும். நவராத்திரி விரதம் இருப்பவர்கள் இம்மையிலும் மறுமையிலும் நல்ல பயன் அடைவார்கள். இந்த ஆண்டு தீமைகள் ஒழிய அம்பிகை அருள் புரிய வேண்டும் என்று அனைவரும் வேண்டிக்கொள்வோம்.

### நவராத்திரி கொலு...

நவாத்திரி பொம்மைகளைச் செய்ய, ஒரே களிமண் மூலப்பொருளாகிறது. ஆனால், கிருஷ்ணராகவும், ராமராகவும், முருகனாகவும், சிவனாகவும், அம்பாளாகவும் பல பொம்மைகள் ஒரே மண்ணில் உருவாகிறது. பரப்பிரமம் பலவகை வடிவங்களை எடுத்து நம்மைக் கரையேற்றுவதை நவராத்திரிக் கொலு உணர்த்துகிறது. அப்படி மகத்தான நவராத்திரி விரதத்தை நாமும் அனுஷ்டித்து வாழ்வில் வளம் பெறுவோமாக.

ஜெருசலேம்

இஸ்ரேல்– ஈரான் போரால்

# கச்சா எண்ணெய் விலை உயரும்

இஸ்ரேல் - ஈரான் போர் பதற்றம் காரணமாக, கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது.

இஸ்ரேல் மீது ஈரான் 400க்கும் மேற்பட்ட ஏவுகணைகளை வீசி, கடந்த முதலாம் திகதி இரவு தாக்குதல் நடத்தியது. ஹிஸ்புல்லா தலைவர் நஸ்ரல்லா மரணத்திற்கு பழிவாங்கவே இந்த தாக்குதலை துவங்கியதாக ஈரான் அறிவித்துள்ளது.

இதற்கு பதிலளித்து, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, சமூகவலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "ஈரான் பெரும் தவறை செய்து விட்டது. தவறுக்கான விலையை ஈரான் கொடுத்தே ஆக வேண்டும். இஸ்ரேலின் வான் பாதுகாப்பு சிறப்பாக இருந்ததால், ஈரான் முயற்சி தோல்வி அடைந்தது" என தெரிவித்தார்.




இதற்கிடையே, இஸ்ரேல் ஈரான் இடையிலான போர் பதற்றம் காரணமாக, கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது.

ஈரான் ஏவுகணை தாக்குதலை ஆரம்பித்த உடனேயே மேற்கத்திய நாடுகளின் எண்ணெய் சந்தைகளில் கச்சா எண்ணெய் விலை மூன்று சதவீதம் அதிகரித்துது. மேலும், எதிர்வரும் நாட்களில் விலை இன்னும் அதிகரிக்கவே வாய்ப்பு அதிகம் என தகவல்கள் வெளியாகியுள்ளது.

மெக்சிகோ

நான்கு மணிநேர போராட்டத்துக்குப் பின்

## உயிர் தப்பினார் பிரேசில் ஜனாதிபதி



மெக்சிகோவில் பிரேசில் ஜனாதிபதி லூலா பயணித்த விமானம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக 4 மணி நேரமாக வானில் வட்டமடித்த நிலையில், பின்னர் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டது.

மெக்சிகோவின் புதிய ஜனாதிபதி பதவியேற்பு விழா நடந்தது. இதில் பங்கேற்க, பிரேசில் ஜனாதிபதி லூலாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவரும் விழாவில் பங்கேற்க மெக்சிகோ சென்றிருந்தார். கிளாடியா ஷீன்பாம் பதவியேற்றதைத் தொடர்ந்து, லூலா மீண்டும் பிரேசில் புறப்பட்டார்.

மெக்சிகோ நகரத்தை விட்டு வெளியேறிய பிறகு, பிரேசில் ஜனாதிபதி பயணித்த விமானம், தொழில்நுட்ப சிக்கலை எதிர்கொண்டது. மணிக்கணக்கில் விமானம் வானில் வட்டமிட்டது. அனுபவம் மிகுந்தவரான விமானி, விமானத்தில் இருந்த அதிகப்படியான எரிபொருளை தீர்ப்பதற்காக இவ்வாறு வட்டமடித்தார். நான்கு மணி நேரம் விமானம் வட்டமடித்த நிலையில் பெருமளவு எரிபொருள் காலியானது.

இதன் பிறகு விமானம் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டதை பிரேசில் விமானப்படை உறுதி செய்தது. இந்நிலையில், "ஜனாதிபதி லூலாவுக்கு எந்த பாதிப்பும் இல்லை. அவர் பாதுகாப்பாக உள்ளார்" என பிரேசிலின் பத்திரிகை செயலாளர் ஜோஸ் கிறிஸ்பினியானோ தெரிவித்தார்.



மெக்சிகோ சிட்டி

மெக்சிகோவின்

## முதல் பெண் ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம்

மெக்சிகோவில் ஜனாதிபதித் தேர்தல் கடந்த புதன்கிழமை(02) நடந்த நிலையில், நாட்டின், 200 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாக, இரண்டு முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களாக பெண்கள் நிறுத்தப்பட்டனர்.

இந்த தேர்தலில், ஆளும் மொரேனா கட்சியின் வேட்பாளரான 61 வயதான, கிளாடியா ஷீன்பாம், ஜனாதிபதியானார். இதன் வாயிலாக, மெக்சிகோவின் முதல் பெண் ஜனாதிபதி என்ற பெருமையை பெற்றுள்ள அவர், அடுத்த ஆறு வருடங்களுக்கு ஜனாதிபதியாக இருப்பார்.

மெக்சிகோ நகர மேயராக பணியாற்றியுள்ள இவர், மிகச் சிறந்த சுற்றுச்சூழல் விஞ்ஞானியாவார். பிரசாரத்தின்போது, கடும் போட்டி நிலவிய நிலையில், 58 சதவீத ஒட்டுகளுடன் ஷீன்பாம் வெற்றி பெற்றார்.

இந்நிலையில், புதன்கிழமை(02) மெக்ஸிகோ நாட்டின் புதிய ஜனாதிபதியாக, கிளாடியா ஷீன்பாம் பதவியேற்றுக்கொண்டார்.

புதுடெல்லி

## தூய்மைப் பணியில் மோடி




மத்திய அரசின் தூய்மை இந்தியா திட்டம், 10 ஆண்டுகளை நிறைவு செய்ததையடுத்து புதுடெல்லியில் உள்ள பாடசாலையொன்றில் மாணவர்களுடன் இணைந்து தூய்மைப் பணியில் பிரதமர் நரேந்திர மோடி ஈடுபட்டார்.

மகாத்மா காந்தியின் 156ஆவது பிறந்தநாளான நேற்று காந்தி ஜெயந்தியாக நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி நாட்டின் பல்வேறு தலைவர்களும் காந்தியின் சிலை மற்றும் உருவப்படங்களுக்கு மரியாதை செலுத்தினர்.

இதையடுத்து, புதுடெல்லியில் உள்ள பாடசாலையொன்றில் மாணவர்களுடன் இணைந்து தூய்மைப் பணியில் பிரதமர் நரேந்திர மோடி ஈடுபட்டார். பின்னர், பாடசாலை நிகழ்ச்சியில் மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய போது அவர் கூறுகையில்,

"தூய்மை இந்தியா திட்டம் எந்த அளவுக்கு வெற்றி பெறுகிறதோ அந்த அளவுக்கு நம்நாடு பிரகாசிக்கும். காந்தி ஜெயந்தியான இன்று, எனது இளம் நண்பர்களுடன் இணைந்து தூய்மைப் பணியை நான் மேற்கொண்டேன். இன்றைய நாளில் இதுபோன்ற பணிகளை மேற்கொள்ள அனைவருக்கு அழைப்பு விடுப்பதுடன், தூய்மை இந்தியா திட்டத்தை வலுப்படுத்தவும் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார்.

திருப்பூர்

மாமியாரை கொன்ற மருமகன்

## 14 வருடங்களுக்குப் பின் கைது



உடுமலைபேட்டை அருகே மாமியாரை வெட்டிக் கொலை செய்துவிட்டு 14 ஆண்டுகளாகத் தலைமறைவாக இருந்த கொலைக் குற்றவாளி கைது செய்யப்பட்டார்.

திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் தாலுகா வேடபட்டியைச் சேர்ந்தவர்கள் ராஜன் - பத்மாவதி தம்பதியர். ராஜனுக்கும் இவரது மாமியார் காளியம்மாளுக்கும் இடையே கடந்த 28-06-2010 அன்று தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது, ராஜன் அவரது மனைவி மற்றும் மாமியாரை அரிவாளால் தாக்கியுள்ளார். இதில் பலத்த காயமடைந்த மாமியார் இறந்த நிலையில் மனைவி பத்மாவதி பலத்த காயமடைந்தார்.

இந்நிலையில், கர்நாடக மாநிலத்திற்குத் தப்பிச்சென்ற ராஜன், கடந்த 14 ஆண்டுகளாகப் பதுங்கி இருந்துள்ளார். இவர் மீது மடத்துக்குளம் நீதிமன்றம் பிடியாணை பிறப்பிக்கவே பொலிஸார் இவரைக் கர்நாடக மாநிலம் மங்களூரில் வைத்து கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிறுத்தி சிறையில் அடைத்தனர்.

பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

# முதலாமிடத்துக்கு முன்னேறிய பும்ரா

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு இந்தியாவின் ஜஸ்பிரிட் பும்ரா முன்னேறியுள்ளார்.




பங்களாதேஷுக்கெதிரான இரண்டாவது போட்டியில், 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றியமையையடுத்தே இரண்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தை பும்ரா அடைந்துள்ளார்.

இதேவேளை, நியூசிலாந்துக்கெதிரான இரண்டாவது போட்டியில், 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய இலங்கையின் பிரபாத் ஜெயசூரிய, எட்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஜஸ்பிரிட் பும்ரா, 2.இரவிச்சந்திரன் அஷ்வின்,
3.ஜொஷ் ஹேசில்வூட், 4.பற் கமின்ஸ்,
5.ககிஸோ றபாடா, 6.இரவீந்திர ஜடேஜா,
7.நேதன் லையன், 8.பிரபாத் ஜெயசூரிய,
9.கைல் ஜேமிஸன், 10.ஷகீன் ஷா அஃப்ரிடி.

இந்நிலையில், குறித்த பங்களாதேஷுக்கெதிரான போட்டியில், 123 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் யஷஷ்வி ஜைஸ்வால், துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் ஐந்தாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

இதுதவிர இப்போட்டியில் 76 ஓட்டங்களைப் பெற்ற விராட் கோலி, 12ஆம் இடத்திலிருந்து ஆறு இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1.ஜோ றூட், 2.கேன் வில்லியம்சன்,
3.யஷஸ்வி ஜைஸ்வால், 4.ஸ்டீவன் ஸ்மித்,
5.உஸ்மான் கவாஜா, 6.விராட் கோலி,
7.மொஹமட் றிஸ்வான், 8.மர்னுஸ் லபுஷைன்,
9.றிஷப் பண்ட், 10.டரைல் மிற்செல்.

இதேவேளை, இந்தியாவுக்கெதிரான இப்போட்டியில் 29 ஓட்டங்களைப் பெற்றதுடன், 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பங்களாதேஷின் மெஹிடி ஹஸன் மிராஸ், சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் ஏழாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஐந்தாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 5 சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,
1. இரவீந்திர ஜடேஜா, 2. இரவிச்சந்திரன் அஷ்வின்,
3. ஷகிப் அல் ஹஸன், 4.ஜோ றூட்,
5.மெஹிடி ஹஸன் மிராஸ்.

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் மல்யுத்தத்தில்

## டெவின் மெரிஷான் மூன்றாமிடம்

எம்.யூ.எம்.சனூன்




அகில இலங்கை பாடசாலைகள் தேசிய மட்ட விளையாட்டு போட்டிகளில் மல்யுத்த போட்டியில் 18 வயதுக்கு உட்பட்ட 65 கிலோ கிராம் எடைப்பிரிவில் போட்டியிட்ட புத்தளம் நரக்களி ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலய மாணவன் டெவின் மெரிஷான் மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

திகன உள்ளக விளையாட்டு அரங்கில் வெள்ளிக்கிழமையிலிருந்து(27) திங்கட்கிழமை (30) வரை நடைபெற்ற மல்யுத்தப் போட்டிகளில் இவ்வித்தியாலய மாணவர் கெவின், ஜெரோன், சஞ்சய, பிரதீப் மற்றும் யதுர்ஷன் ஆகியோர் இலங்கையின் பிரபல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவருடன் போட்டியிட்டு காலிறுதி வரை முன்னேறி இருந்தனர்.

பாடசாலை அதிபர் ஜே.ஏ.எஸ். அமல்ராஜின் வழிகாட்டலில் பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்ட 'பாடசாலை மல்யுத்த கழகத்தின்' பயிற்றுவிப்பாளராக முன்னாள் சர்வதேச மல்யுத்த வீரர் லசந்த பர்ணாந்து செயற்படுவதோடு, பாடசாலையின் உடற்கல்வி போதனாசிரியர் யூ.எச்.எம்.பர்ஹான் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் முஹம்மது அஸ்லிப் ஆகியோர் மாணவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்க பூரண ஒத்துழைப்பை நல்கி வருகின்றனர். தேவையான மேலதிக ஆலோசனைகளை கல்பிட்டி கோட்ட உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் முஹம்மது பளீல் வழங்குவது குறிப்பிடத்தக்கது.

போட்டிகளுக்கு செல்லும் மாணவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் மற்றும் ஆசிரியர்கள் வழங்கி வருகின்றமை பாராட்டத்தக்கது.




## கால்பந்தாட்டத் தொடரில் சம்பியன்

அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கையிலுள்ள 14 பல்கலைக்கழகங்கள் பங்கேற்ற கால்பந்தாட்டத் தொடரில் தென்கிழக்கு பல்கலைக்கழகம் சம்பியனானது.

வவுனியா பல்கலைக்கழக மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தை வென்றே தென்கிழக்குபல்கலைக்கழகம் சம்பியனானது.

தேசிய மட்ட தைக்குவாண்டோவில்

## கல்முனை சாஹிரா சுரைப் முதலிடம்

அஸ்ஹர் இப்றாஹிம்

கல்வியமைச்சால் இரத்தினபுரி உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடத்தப்பட்ட அகில இலங்கையிலுள்ள பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தைக்குவாண்டோ போட்டியில், கல்முனை சாஹிராக் கல்லூரியின் ஜே.ஏ.சுரைப் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான ஸ்பாரிங்க் நிகழ்ச்சியில் முதலிடம் பெற்றுள்ளார்.

இவ்வெற்றியைப் பெற உதவிகளையும் மாணவர்களின் தேவைகளையும் பூர்த்தி செய்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய கல்லூரி அதிபர் ஜனாப் எம்.ஐ.ஜாபிர் உள்ளிட்ட கல்வி சமூகம் இணைப்பாட விதானத்துக்கு பொறுப்பான உதவி அதிபர் ஏ.எல்.எம்.தன்ஸில், அர்ப்பணிப்புடன் தமது திறமைகளை வெளிப்படுத்தி இவ்வெற்றிகளை பெற்ற மாணவர்கள், பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியர் பயிற்றுவிப்பாளர் யூ.எல்.எம்.இப்றாஹிம், உதவி பயிற்றுவிப்பாளர்களான ஏ.பி.ஏ.ஸிஹாப், எம்.எச்.ஏ.ஹஸீன், ஏ.பி.ஏ.ஹம்தாத், ஜே.ஏ.சுமைத், ஏ.எல்.ஏ.எம்.அப்ரி, ஏ.பி.ஏ.ஹமீம், விளையாட்டு பொறுப்பாசிரியர் எம்.ஐ.எம்.அமீர், உடற்கல்வி பிரிவு ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர்கள் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 03 ஒக்டோபர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.